விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

R A M C O

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 10 வியாழக்கிழமை (26.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

## அரசியலமைப்பு சீர்திருத்த வரைவை சமர்ப்பிக்கக் கோருகிறது ஐ.தே.க.!

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான திட்டவரைவை கையளிக்கா விட்டால் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை தொடரப் போவதில்லையென ஐக்கியதேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க இதைத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக அரசாங்கத்துடன் ஐ.தே.க. கடந்த பல வருடங்களாக பேச்சுவார்த்தை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது திஸ்ஸஅத்தநாயக்க தொடர்ந்து பேசுகையில், ஒவ்வொரு சந்திப்பின் போதும் அரசாங்கம் புதுபுது விடயங்களை முன்வைக்கின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

## கொலைக் குற்றவாளி ஒருவருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பு

### யாழ். மேல் நீதிமன்றம் விதித்தது

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்குப்பகுதியில் கடந்த 1999 ஆம் ஆண்டு பெண் ஒருவரை கடத்தி கொலை செய்த குற்றத்துக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த 08.02.1999ஆம் ஆண்டு மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த பிரியதர்சினி என்ற பெண்ணை கடத்தி அவரின் ஆயிரத்து 825 ரூபாய் உடைமையை கொள்ளையடித்தமை, அவரைக் கொலை செய்தமை போன்ற குற்றத்துக்காக அதேஇடத்தைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் (16ஆம் பக்கம் பார்க்க)

# டிசம்பருக்குள் மீள்குடியேற்றம்!

# இந்திய அரசிடம் உறுதியளிப்பு!!

## 10 ஆயிரம் பேரே முகாமில் என்கிறார் பசில்



(கொழும்பு)

இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் அனைவரும் டிசம்பர் மாதத்திற்குள் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொருளாதாரத்துறை அமைச்சரும் ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ டெல்லி சென்று மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் குமாரி செல்ஜாவை சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்த்தப்படாதோரின் நிலை பரிதாபகரமாக உள்ளது


### இந்திய மக்களவையில் அமளி

(புதுடில்லி)

இலங்கையில் போர் முடிந்து ஓராண்டுக்குப் பின்னரும் இடம்பெயர்ந்த தமிழர்கள் இன்னமும் முழுமையாக மீள் குடியேற்றம் செய்யப்படவில்லை. அவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படாதவர்களின் நிலை பரிதாபகரமாகவுள்ளது என தமிழகக் கட்சிகள் கவலை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் மறுவாழ்வு தொடர்பாக தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, நேற்று மக்களவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்திய அரசு தொடர்ந்தும் உதவி



### கன்காணிக்க வருகிறேன் என்கிறார் கிருஷ்ணா

(புதுடில்லி)

உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி செய்து வருகின்றது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை மீளக்குடிமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த விரைவில் இலங்கை செல்லவுள்ளதாக அவர் கூறினார்.

நாடாளுமன்ற மக்கள் அவையில் புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்கள் தொடர்பாக கொண்டுவரப்பட்ட கவனயீர்ப்புத் (16ஆம் பக்கம் பார்க்க)

## 70 புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70-க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இவ்வருடம் முதல் பரீட்சை திணைக்களம் சான்றிதழ் வழங்கவுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொத்தம் 200 புள்ளிகளுக்கு 70-க்கு மேல் பெறுபவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவே கருதப்படுவர். அதனால் மாணவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது.

அத்துடன் வெட்டுப்புள்ளிக்கு குறைய புள்ளிகளை பெறும் மாணவர்களின் பெற்றோர் தங்களது (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அபிவிருத்தி குறித்து அமைச்சர்களுடன் பேசினார் பசில்

### கோத்தபாயவும் இந்தியா பயணமானார்

(புதுடில்லி)

இந்தியா சென்றுள்ள அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்றுப் புதுடில்லியில் பல்வேறு அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார். நேற்றுக் காலை வேளாண் துறை அமைச்சர் சரத்பவார், சுற்றுலாத்துறை அமைச்சர் குமாரி செல்ஜா ஆகியோரை சந்தித்தார். பிற்பகலில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்து ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினார்.

இச்சந்திப்பில் தமிழ் மக்களை மீள் குடியேற்றம் செய்யும் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் உட்பட இரு நாட்டு உறவுகள் தொடர்பான பல்வேறு (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதியாக வடமாகாண ஆளுநர் சந்திரசிறி!



### பாதுகாப்பு செயலர் முன்மொழிவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதியாக வடமாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நியமிக்கப்படவுள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாகவுள்ள டாக்டர் பாலித கோஹன்ன அடுத்த மாதத்துடன் ஓய்வு பெறுவது உறுதியாகியுள்ள நிலையில் இந்தப் பதவிக்கும் இராணுவ அதிகாரி ஒருவரையே நியமிக்கும் முடிபுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மழை காரணமாக வடமராட்சி கிழக்கில் முகாம்களிலுள்ள மக்கள் அசௌகரியம்

## விரைவில் மீள்குடியேற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் தற்போது பெய்து வருகின்ற கன மழை காரணமாக வடமராட்சிக் கிழக்கு இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மழை வெள்ளம் வீடுகளுக்குள்ளே வருவதாகவும் பொருள்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்வதாகவும் நிம்மதியாக நித்திரை கொள்ளக் கூட முடிபதில்லை என்று இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கொடிகாமம் இராமாவில் இடைத்தங்கல் முகாமில் வாழ்கின்ற மக்களும் மழை காரணமாகப் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் மழை வெள்ள நீர் கொட்டகைக்குள் கசிவதால் உணவுகளைச் சமைப்பதில் தாங்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே விரைவாக தங்களைத் தங்களது பகுதிக்குள் மீள்குடியேற்றுவதன் ஊடாக மழையின் போது ஏற்படும் பாதிப்புக்களிலிருந்தும் தாம் விடுபட முடியும் எனவும் தமது விரைவான மீள்குடியேற்றத்தின் அவசியம் குறித்து பல தரப்பினர்களிடமும் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பில் ஏற்கனவே யாழ். அரச அதிபர், வடமராட்சிக் கிழக்குக் கூட்டுறவு சங்கச் சமாசம், வடமராட்சி இடம்பெயர்ந்தோர் அபிவிருத்தி அமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியினர் உட்பட பல தரப்பினரும் அரச உயர் மட்டங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு புதிய வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரியாக புதிவு வைத்திய உத்தியோகத்தர் திருமதி நன்னித்தம்பி மகேஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆளுநரினால் இவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்து ஒருவருட காலம் வைத்தியசாலையில் தங்கியிருந்து தனது வைத்திய சேவையை வழங்குவார்.

வைத்திய உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக இதுவரை காலமும் மாதாந்த கடமைச் சுற்று அடிப்படையில் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு வைத்திய சேவை நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் கல்வி முகாமைத்துவப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட, ஆகக் குறைந்தது மூன்று வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையுடைய இலங்கை அதிபர் சேவை 1 அல்லது இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

இ.அ.சே.1 இல் பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இ.அ.சே. 2-1 ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை 2010.08.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறையில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)






மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

கங்காதரன் சாஸ்திரி

077 0712537,

0091-9686619815(இந்தியத் தொலைபேசி)

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(2256)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்


## அதிகாலையில் அதிரடி வேட்டை

# திருட்டு மின்சாரம் பெற்று வந்த 31 பேர் மாட்டிக் கொண்டனர்

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பிரதேச மின்பாவனையாளர் நிலையமும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் பிரிவும் இணைந்து நேற்று அதிகாலை 2 மணி முதல் மேற்கொண்ட திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் திருட்டு மின்சாரம் பெற்ற 31 பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்.

நேற்று அதிகாலை 2 மணி முதல் சாவகச்சேரிப் பிரதேச மின்பாவனையாளர் நிலையத்திற்குட்பட்ட வரணி வடக்கு, இடக்குறிச்சி, நாவற்காடு, அம்மாகடையடி மற்றும் மிருசுவில், கச்சாய் தெற்கு ஆகிய பிரதேசங்களில் திருட்டு மின்சாரம் பெறுவோரைப் பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 31 பேர் வசமாக மாட்டிக் கொண்டனர். இவர்களிடமிருந்த மின்சார வயர்கள் உட்பட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டுக் குற்றப் பணம் செலுத்தியதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிடிப்பட்டவர்களிடமிருந்து குற்றப் பணமாக 3 இலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாய் மின்சார சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை திருட்டு மின்சாரம் பெறுவோரினை கைது செய்யும் திடீர் வேட்டைத் தொடரும் என சாவகச்சேரி மின்பாவனையாளர் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-85)

# நிறைவேற்றுக் குழுவை நியமிப்பதற்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்டத்திற்கான நிறைவேற்றுக் குழுவை அமைப்பதற்கான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கடற்கரை வீதியில் உள்ள ஆர்.டி.ஏ. கேட்போர் கூடத்தில் நடைபெறும் என பேராசிரியர் டி.எஸ்.ஜெயந்த களுபோவில அறிவித்துள்ளார்.

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பானது யாழ்.மாவட்ட நிறைவேற்றுக் குழுக் கூட்டம் 2010 ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஆர்.டி.ஏ. கேட்போர் கூடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்தக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மாணவர் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் நடத்தப்படும் மாணவர் உடல், உள மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கும் மறுநாள் சனிக்கிழமை யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வுக்குப் பாடசாலை அதிபரும் ஆசிரியர் ஒருவரும் தவறாது சமுகந்தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச-6,2)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு தியாகராஜா தருமலிங்கம்
மறைவு : 19.07.2009



திருமதி தருமலிங்கம் மனோன்மணி
மறைவு : 04.09.2009

இரு ஆலமரம் போல் இருந்த எமக்கு
வழிகளைக் காட்டினீர்களே
அங்கே ஆலம் வித்துக்களாய்
நாங்கள் இருந்தோமே
மெதுவாய் ஒரு ஆலமரம் சாய
விரைவாய் மற்றயதும் சாய்ந்ததுவோ
அதைப்போல உமை விட்டு நாமும்
எம்மை விட்டு நீங்களும்
வெகுதூரம் சென்றுவிட்டீரே
சென்ற தூரம் அறியாமல்
ஓராண்டும் சென்றதுவோ
ஆயினும் உம் நினைவுகள்
அன்றும் இன்றும் என்றும்
எம்முள்ளே இருந்து கொண்டே
உள்ளதுவே.

41/1, அம்மன் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(2247)

உங்கள் நினைவுகள் மாறாமல்
நிலைத்திருக்கும் குடும்பத்தினர்.






# விஞ்ஞானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் ஏ பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்படும் சவால்களை எதிர்கொள்ளும் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்வி எனும் கருப்பொருளிலான இலவசக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பௌதிகவியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையைக் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஏ பிரிவின் செயலாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி கேட்டுக் கொள்கிறார். (6-4)


## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில்,நெல்லியடியில் இயங்கிவரும் பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர்,தொழில்நுட்பவியலாளர் தேவை.முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

26.08.2010 - 10.00 முதல் 04.00 மணி வரை
27.08.2010 - 02.00 முதல் 05.30 மணிவரை

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 218 , ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

(C-938)

# இன்று ஒரு தகவல்

## எதிரி எங்கே இருக்கிறான்?

பஞ்ச பாண்டவர்கள் 12 வருடம் வனவாசம் அனுபவித்தார்கள். அந்தச் சமயம் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று கிருஷ்ணர் நினைத்தார்.

உடனே புறப்பட்டுக் காட்டுக்குப் போனார். அவர்களைப் பார்த்தார். ஓரிரவு அவர்களுடன் தங்கினார். அப்பொழுது அவர்கள் அவருக்கு காவல் காத்தார்களாம்.

ஒருவர் மாறி ஒருவர் இரவுக் காவல் காக்க வேண்டும். ஒவ்வொருவரும் கொஞ்சக் கொஞ்ச நேரம் காவல் காப்பார்கள். முதலில் அர்ஜுனன் காவல் காத்தான். எல்லோரும் தூங்கினார்கள். அவன் மட்டும் முழித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது எதிரில் ஓர் உருவம் தெரிந்தது. உற்றுப் பார்த்தான். அது ஒரு பூதம். அது பாட்டுக்குக் கொஞ்சத் தூரத்தில் நின்று கொண்டிருந்தது.

இவனுடைய நேரம் முடிந்ததும் அடுத்ததாக நகுலன் வந்தான். அப்பொழுதும் அந்தப் பூதம் கண்ணில்பட்டது. ஆனால் அது முன்பிருந்ததை விட கொஞ்சம் பெரிதாக இருந்தது.

இவனுக்கடுத்ததாக சகாதேவன் , பீமன், தருமன் இப்படி மாறி மாறி காவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

வரவர அந்தப் பூதத்தின் வடிவம் பெரிதாகிக் கொண்டே இருந்தது. ஒவ்வொருவரும் அதைக் கொல்வதற்கு முயற்சி செய்தார்கள்.

இரவுக்காவல் பணியில் பஞ்சபாண்டவர்கள் இப்படி மாறி மாறி ஈடுபடுவதைப் பார்த்ததும் கிருஷ்ணர் தருமரைப் பார்த்துக் கேட்டார்:

''இந்தக் காவல் பணியில் எனக்கும் ஒரு வாய்ப்புத் தரக்கூடாதா? நானும் கொஞ்சநேரம் கண்விழித்துக் காவல் காக்கிறேன்'' என்றார். இதற்குத் தருமர் சொன்னார்.

''செய்யுங்களேன். இந்த உலகத்தைப் பாதுகாப்பதும் நீங்கள்தான். பாண்டவர்களைப் பாதுகாப்பதும் நீங்கள்தான். இந்தப் பாதுகாவல் பணியிலும் ஈடுபட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதை வேண்டாமென்று சொல்வதற்கு நாங்கள் யார்?'' என்றார்.

ஒவ்வொருவராக காவல் காத்து முடித்ததும் இப்பொழுது கிருஷ்ணர் வரவேண்டிய முறை. காவலுக்குக் கிருஷ்ணர் புறப்பட்டார்.

இப்பொழுது தருமர் சொன்னார்:

''கிருஷ்ணா காட்டில் ஒரு பெரிய பூதம் இருக்கிறது. அது வரவரப் பெரிதாகிக் கொண்டே இருக்கிறது. அது உங்களுக்கு ஏதாவது இடைஞ்சல் கொடுக்கும். அதனால் நீங்கள் போகாமலிருப் பதே நல்லது'' என்றார்.

அதற்கு கிருஷ்ணர் சொன்னார்.

"இப்படி என்மீது உனக்குச் சந்தேகம் வரலாமா? ஏன் இப்படிப் பட்ட சந்தேகம்? அது உன்னுடைய பலவீனம். நான் நிச்சயமாக காவல் பணி செய்யத்தான் போகிறேன்'' என்றார். போனார்.

நள்ளிரவு இரண்டு மணியிலிருந்து 3 மணி வரைக்கும் அவருடைய நேரம். 3 மணிக்கு பின் அர்ஜுனன் வரவேண்டும். அதனால் 3 மணிக்கு அர்ஜுனன் வந்தான்.

கிருஷ்ணர் சிரித்து கொண்டேயிருந்தார். எதிரில் பார்த்தான் பூதத்தையும் காணவில்லை பிசாசையும் காணவில்லை.

அர்ஜுனன் கேட்டான். ''கிருஷ்ணா, நீ அந்தப் பூதத்தை – அரக்கனை அழித்துவிட்டாயா?'' என்றான்.

இப்பொழுது கிருஷ்ணர் சொல்கிறார் '' அர்ஜுனா நான் எந்தப் பூதத்தையும் பிசாசையும் அழிக்கவில்லை. என்னுடைய கண்ணுக்கு எதுவுமே தெரியவில்லை. எதுவுமே நம்முடைய பிரதி பலிப்புத்தான்.

நம்முடைய கோபம்தான் நமக்கு முன் அரக்கத்தனமாக காட்சியளிக்கிறது. எவ்வளவுக்கு எவ்வளது கோபம் அதிகரிக்கிறதோ ... அந்த அளவுக்குச் சமமாக அதுவும் வளர்க்கிறது. எனக்கு யார் மீதும் கோபமோ வெறுப்போ இல்லை.

உண்மையிலேயே நமக்கென்று யாரும் எதிரிகள் கிடையாது. நம்முடைய குணங்கள்தான் நமக்கு எதிரிகள். உள்ளே இருக்கும் உணர்வுகள் தான் நமக்குப் பிரதிபிம்பமாக வெளியே தெரிகிறது. வெறுப்பேயில்லாமல் எல்லாவற்றையும் அன்பால் நிரம்பும் போது நம்முடைய கண் முன்னாடியும் அன்புதான் தெரியும். அரக்கன் தெரியமாட்டான்'' என்றார்.

இதைச் சரியாக புரிந்து கொண்டோமானால் எல்லோரும் இன்பமாக வாழலாம்.

நம்ம ஆள் ஒருத்தர் இருந்தார். அவர் சொன்னார்.

'' சேர், என் கண்ணுக்கு யாருமே எதிரியாக தெரிவதில்லை'' என்றார்.

"அப்படியா?" என்றேன் ஆச்சரியமாக. "ஆனால் ஒன்று சேர்... எல்லாருடைய கண்ணுக்குமே நான் எதிரியாகத் தெரிகிறேன்'' என்று முடித்தார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைவருக்கும் சான்றிதழ்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைவருக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளுடன் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மகரகமவில் நேற்று நடைபெற்ற இலவச பாடநூல் விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படும் வேளை ஒரு புள்ளியால் குறைந்த மாணவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் தோல்வியடைந்தவராக கருதப்படுகிறார். இது மாணவருக்கும் பெற் றோர்களுக்கும் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது.

எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

(6-4)

# இருக்குமிடத்தை அறிந்து கொள்ளும் ஜீ.பி.எஸ் கருவிகளை பயன்படுத்த அனுமதி

## அரசாங்கம் அறிவிப்பு

இருக்கும் இடத்தை அறிந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படும் ஜீ.பி.எஸ். கருவிகளை சாதாரண பொதுமக்களும் பயன்படுத்த முடியும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அதிநவீன ஜீ.எஸ். பி. கருவிகளை பொதுமக்கள் பயன்படுத்தக் கூடாது என அரசாங்கம் முன்னர் தடைவிதித்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த காலத்தில் முக்கிய நிலைகளை அறிந்து கொள்வதற்காக புலிகள் இந்தக் கருவியைப் பயன்படுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலையங்கள் மற்றும் வீதி அமைப்புக்கள் ஆகியவற்றை ஜீ.எஸ்.பி. கருவியைப் பயன்படுத்தி அறிந்து கொள்ள முடியும் எனவும் இராணுவ முகாம்களின் நிலைகளை அறிந்து கொள்ள முடியாது எனவும் குறிப்பிடப்படுகிறது.

கருவிகளை பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதனால் பொதுமக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# இராசி பலன்

*26.08.2010*
*(ஆவணி 10, வியாழக்கிழமை)*
*துதியை பின்னிரவு 2.39 மணிவரை*
*பூரட்டாதி பின்னிரவு 3.09 மணிவரை*
*இராகுகாலம் 1.35-3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35-09.05 மணிவரை*

**மேடம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசிவழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்** பொருள் சேர்க்கையுண்டு, தொழில் வளர்ச்சிக்கு உகந்த நாள், போன் மூலம் பொன்னான செய்தியொன்று வந்து சேரும், புதிய திட்டங்கள் வகுப்பீர்கள்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், சில பொருட்களை கைமாற்று செய்ய வேண்டி வரலாம், பயணத்தின் மூலம் அனுகூலம் கிட்டும்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி குறையாதிருக்க பிறரை அனுசரித்து செல்லல் வேண்டும், பிரயாண பயமுண்டு.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தொலைபேசித்தகவல் பயணத்திற்கு உறுதுணை புரியும், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல்நலம் சீராகி உற்சாகப்படும் நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வியாபார விருத்தி ஏற்படும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், பயணங்களால் பலன் உண்டு, பாராட்டும், புகழும் கூடும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் அனுகூலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வருமானம் பல வழிகளிலிருந்து வந்து சேரலாம்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், கற்பனைகள் அதிகரிக்கும்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடும், தொழில் ரீதியில் சில மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்தி வியப்படைய வைக்கும்.

வளவன்

# பேசும் படம்



வீதியில் ஆட்டுப்பட்டி;
விதி மாறும் சாரதிகள்...

காட்சி-யாழ். ஸ்ரான்லி வீதி.

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 80 |
| தக்காளி | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 |
| கோவா | 80 | 80 |
| கரட் | 100 | 90 |
| பூசணி | 50 | 40 |
| புடோல் | 50 | 30 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 |
| பயற்றங்காய் | 140 | 80 |
| லீக்ஸ் | 140 | 100 |
| பீற்றூட் | 50 | 30 |
| கறிமிளகாய் | 80 | 90 |
| முருங்கைக்காய் | 140 | 100 |
| போஞ்சி | -- | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

## தவறவிட்ட ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

உடுவிலைச் சேர்ந்த கே.கஜேந்திரன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட சில முக்கிய ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.(6)

## புதிய தொழிற் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் நடாத்தப்படும் அழகுக் கலை தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கமைய (NVQ III) ஆறுமாதகால கற்கை நெறிக்கான இறுதித் நேர்முகத் தேர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொழிற்றிறன் பயிற்சியைப் பெற விரும்புவோர் அன்றைய தினம் சுயவிபரக் கோவையுடன் இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை, இல.375,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தவறாது சமுகமளிக்குமாறு உதவிக் கணக்காளர் த.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார். (6-4)

## விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் லீக்போட்டிகள் மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 4போட்டிகள் மாத்திரமே நடைபெற்றுள்ளதாகவும் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக மைதானம் வீரர்களுக்கு உகந்தவகையில் இல்லாமையினால் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் விளையாட்டுக் கழகங்களுக்கு போட்டி அட்டவணை அனுப்பிவைக்கப்படும் எனவும் திகதிகள் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளதாகவும் போட்டிகள் அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் தொடர்ந்து நடைபெறும் என்றும் மைக்கல் விளையாட்டுக் கழக செயலாளர் த.வேணுகானன் அறிவித்துள்ளார். (6-4-24)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 12ஆம் நாளான இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை செல்வி சுகன்யா புலேந்திரகுமார் (பாட்டு), திருமதி மதுரா பாலச்சந்திரன் (வயலின்), பிரம்மஸ்ரீ கே.சுவாமிநாதசர்மா (மிருதங்கம்), ஏ. செல்வரத்தினம் (கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன் செல்வி கிருஷ்ணி ரமேஷ், கார்த்திகா ரமேஷ் (பாட்டு), செல்வன் சாயிராம் ரமேஷ் (மிருதங்கம்), என்.மாதவன் (கெஞ்சிரா), எஸ்.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்று வரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை ''நக்கீரர் வாழ்வில் முருகன்'' என்னும் விடயம் பற்றி நி.பகீரதன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து அரியாலை ஞானவைரவர், பெரியவிளான் வடகேசரிப்பிள்ளையார், நாவற்குழி அறவொளி மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6)




## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறிக்கான (2010/11 கல்வியாண்டு - அணி VIII) ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறும். இக்கற்கை நெறிக்கு பதிவு செய்த அனைத்து மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கேட்டுக்கொள்கின்றார். உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதியின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் கல்வித்துறைப்பேராசிரியர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இக்கற்கைநெறிக்கு இலங்கையின் அனைத்துப பிரதேசங்களில் இருந்தும் அதிபர்கள், கல்வி நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். (6)

## அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தினால் திறந்த அரங்கம்

நல்லூர் கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு பிரெட்றிக் இபேர்ட் டிப்டங் (FES) இன் அனுசரணையுடன் அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகம் (PPID) அறிவை தளமாகக் கொண்ட அபிவிருத்திக்கான பாதைகள் எனும் கருப்பொருளில் திறந்த அரங்கம் ஒன்றை எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5 மணிவரை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

பிரெட்றிக் இபேர்ட் டிப்டங்கின் வதிவிட பிரதிநிதி ஜோக்கிம் ஸ்க்ளுட்டர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம பேச்சாளர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, HSBC வங்கி யைச் சேர்ந்த நிரஞ்சன் நடராஜா, யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இந்த திறந்த அரங்கம் யாழ் மற்றும் வடமாகாணத்தின் பாரம்பரிய விவசாயம் மற்றும் மீன்பிடி பொருளாதாரத்தை நவீன அறிவை தளமாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றியமைப்பதற்கான வழிமுறைகள், வகைகள் மற்றும் அவற்றின் செலவுகள், பயன்கள் என்பவற்றை சமர்ப்பிப்பதையும் விவாதிப்பதையும் நோக்கமாக கொண்டமைந்துள்ளது. (6)

# செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவனத்தினால் இம்மாதம் 28, 29ஆம் திகதிகளில் ''கால நிலை மாற்றம்'' தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்கள், பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை கல்வியியலாளர்கள், யாழ்.மாவட்ட வலயக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள், முதன்மை ஆசிரியர்கள் ,தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (6-4)

✠✠✠

(அல்வாய்)

வடமாகாண கல்வித்திணைக்களம் யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தவுள்ளது.

அடிப்படை ஆரம்பப் பிரிவுக்கான வதிவிடப் பயிற்றுநர் பயில்வு செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் 31ஆம்திகதி வரை திருகோணமலை உப்புவெளி தொழிற் பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்வதற்கு வடமாகாணத்தின் சகல வலயங்களிலிருந்தும் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுக்கமைய தெரிவுசெய்யப்பட்ட வளவாளர்கள் நாளை இரவு உப்புவெளி தொழிற்பயிற்சி நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யுமாறு வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

✠✠✠

தரம் 6, 7,8,9 ஆகிய வகுப்புக்களுக்கு கணிதம்,தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் வதிவிடப் பயிற்றுநர் பயில்வு செயலமர்வு எதிர்வரும் முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரை திருகோணமலை உப்புவெளி தொழில்திணைக்கள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இச் செயலமர்வில் பங்குகொள்ள கணிதபாட, தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர்களும் அழைக்கப்பட்டிருப்பதாகவும் பங்குபற்றும் வளவாளர்கள் தமது பதிவு களை எதிர்வரும் 31ஆம் திகதி இரவு உறுதிப்படுத்துமாறும் வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

✠✠✠

தரம் 1, 2,3,4 மற்றும் 5ஆம் வகுப்புக்களுக்குரிய தமிழ்மொழி, ஆங்கிலமொழி ஆகியவற்றின் வதிவிட பயிற்றுநர் பயில்வு செயலமர்வு எதிர்வரும் 5ஆம்திகதி முதல் 8ஆம்திகதிவரை திருநெல்வேலி உப்புவெளி தொழிற்பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இச்செயலமர்வில் கலந்துகொள்வதற்கென தத்தம் கல்வி வலயங்களிலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளரால் தெரிவுசெய்யப்பட்ட, பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்வி ஆலோசகர்கள் , ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் தங்களுக்கான பதிவுகளை எதிர்வரும் 4ஆம்திகதி இரவு மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (6-19)

## பாடசாலை மாணவர்களுக்கான — மதிய உணவு வழங்கல் —

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற் திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைக்கான உணவு விநியோகத்தினை மேற்கொள்ளும் பொருட்டு உரிய ப.நோ.சங்கங்களுக்கு களஞ்சியங்களில் இருந்து உணவுப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவ பிரிவினரால் கடந்த 23 ஆம்திகதியில் இருந்து வழங்கப்படுகின்றது.

எனவே.ப.நோ.கூ.சங்கங்கள் வழங்கற் கட்டளைகளைப் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் உணவுப் பொருட்களை உரிய பாடசாலைகளிற்கு விநியோகித்து முடிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

மேலும் பாடசாலை அதிபர்கள் உரிய ப.நோ.கூ.சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப்பொருள் விநியோகத்தை துரிதப் படுத்தி மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலை சீரான முறையில் மேற்கொள்ளுமாறு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம்திகதி புதன்கிழமைக்கு முன்னர் உணவுப் பொருட்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கம் (021 222 9716 ) மூலம் தொடர்புகொள்ளுமாறும் மேலும் பாடசாலை அதிபர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ப.நோ.கூ.சங்கங்களுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (6-2)

## வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(திருநெல்வேலி)

வடமராட்சி பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள ஒழுங்கைகள் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக தும்பளை நெல்லண்டை கிழக்குப் பகுதியில் உள்ள ஒழுங்கைகளே செப்பனிடப்படாமல் பொதுமக்கள் பயணிக்க முடியாது காணப்படுகிறது.

மேலும், நெல்லண்டை கிழக்குப் பகுதியில் பாலத்திற்கு அருகில் உள்ள வீதியானது செப்பனிடப்படாமையால், இப்பகுதியால் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போர் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து இவ்வீதியை செப்பனிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-2-43)

# கட்டட நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க சம்மேளனத்திற்கான கட்டடம் ஒன்று மாலுசந்தி அல்வாய் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு நீண்ட பல மாதங்களாக கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அரைகுறையாகக் காணப்படுகிறது.

ஆரம்பத்தில் இக் கட்டடத்தை அமைக்க போரூட் நிறுவனத்தின் நிதியுதவி வழங்கப்பட்ட போதிலும் மிகுதி வேலைகளை முடிவுறுத்த நிதி வழங்கப்படாததால், இக்கட்டட முழு வேலைகளும் பூர்த்தி அடையாத நிலையில் உள்ளது.

எனவே இக்கட்டடத்தை புனரமைப்புச் செய்து இந் நிறுவனம் இக்கட்டடத்தில் செயற்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பகுதிவாழ் நலன் விரும்பிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(6-2-10)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை பொது சுகாதாரப் பிரிவினர் கொழும்புத்துறை,பாசையூர் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினருடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அ.பகீரதன் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் வீடுகள்,அரச தனியார் நிலையங்களில் சுத்தம் பேணுவோரை இனங்கண்டு ,உரியமுறையில் உறுதிப்படுத்திய பின்னரே சான்றிதழ் வழங்கப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக்கூட்டம் குருநகர் உயர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு கடந்த 23ஆம் திகதி காலையில் யாழ். மாநகர சபை சுகாதாரப்பரிசோதகரால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-2-51)

## மின்தடையா?

# 1987 என்ற தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்!

மின்சார விநியோகம் தடைப்படும் சந்தர்ப்பங்களில் 1987 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்குமாறு இலங்கை மின்சாரசபை , பாவனையாளர்க ளைக் கேட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி இலக்கம் தொடர்பாக முன்னரும் மக்களுக்கு அறிவித்திருந்த போதிலும் அவர்கள் மின்சார சபையின் பிரதேச அலுவலகங்களுக்கே அறிவிப்பதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் வித்யா அமரபால தெரிவித்துள்ளார்.

மின்சாரப் பாவனையாளர்கள் 1987 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அறிவிப்பதன் மூலம் மின்சாரத் தடைக்கான காரணம் மற்றும் அது தொடர்பாக மேற் கொள்ள வேண்டிய தீர்வு நடவடிக்கை போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமென அவர் சுட்டிக்காட்டி னார். (6-2)

# இடம்பெயர்ந்து முகாம்களில் தொடர்ந்து வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ந்து செயற்படுத்திவரும் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்து வாழும் மக்களில் ஒரு தொகுதியினருக்கு வலைகளும் வலைசார் உபகரணங்களும் கணவனை இழந்த பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளின் அடிப்படையில் தூள் தயாரித்து விற்பனை செய்யக்கூடிய வகையில் உபகரணங்களும் அதற்குரிய பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் அவர் உரையாற்றுகையில்,

இவ்வுதவிகள் மூலம் இடம்பெயர்ந்து தனித்து வாழும் பெண்கள் தமது வருமானத்தை சுயமாக பெற்றுக்கொள்வதோடு அவர்களோடு வாழும் சிறுவர்கள் அனைவரும் பயன்பெற முடியும் எனத் தெரிவித்தார். இவ் உதவிகள் பாண்டவெட்டை நலன்புரி நிலையத்தில் 10 பயனாளிகளுக்கு வலை களும் வலைசார் உபகரணங்களும் பெரிய மதவடி நலன்புரி நிலையத்தில் 10 பயனாளிகட்கு சுயதொழில் வாய்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டன. (6)

# அரியவகை ஜீவராசிகள் கடத்தலை தடுப்பதற்கு விசேட திட்டம்

(கொழும்பு)

நாட்டின் அரிய வகை ஜீவராசிகள் கடத்தப்படுவதை கட்டுப்படுத்துவதற்கான விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல ,அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்ததிட்டம்செயற்படுத்தப்படுவதாகதிணைக்களத்தின் சுற்றி வளைப்புப் பிரிவு உதவிப் பணிப்பாளர் உபாலி பத்மசிறி தெரிவித்தார்.

நாட்டிற்கே உரித்தான மற்றும் பாதுகாக்கப்பட்ட பூச்சி வகைகளை சட்டவிரோதமாக சேகரிப்பது வன ஜீவராசிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்க முடியாத குற்றமென சுற்றாடலியலாளர் சட்டத்தரணி ஜெகத் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டன் சமவெளி உயிரியல் பூங்கா பகுதியில் பூச்சிகளை சேகரித்த 2 வெளிநாட்டுப் பிரஜைகள் கடந்த திங்கட் கிழமை கைது செய்யப்பட்டனர். இது ஹோட்டன் சமவெளி யில் பதிவான இரண்டாவது சம்பவமாகும். (6)

# கனடா வந்தவர்கள் அனைவரும் அகதிகள்; எவ்வித கடத்தல்களையும் மேற்கொள்ளவில்லை

## கனடிய பாதுகாப்பு பிரிவினர் தெரிவிப்பு

எம்.வி.சன் சீ கப்பலில் கனடாவை வந்தடைந்துள்ளோர் எவ்வித கடத்தல்களையும் மேற்கொள்ளவில்லை என அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கனடாவை அடைந்துள்ள 492 பேரிடமும் தாம் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் அவர்கள் எவ்வித கடத்தல்களையும் மேற்கொள்ளவில்லை எனவும் றோயல் கனடா மொமன்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் அகதிகள் அந்தஸ்து கோரியே கனடாவுக்கு வந்துள்ளதாக றோயல் கனடா மொமன்ட் பொலிஸ் அதிகாரி மைக்கல் மேக்லகேன் தெரிவித்துள்ளார்.

கனடாவை வந்தடைந்த இலங்கை அகதிகளிடம் தாம் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டதாகவும் அவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மற்றுமொரு அகதிகள் கப்பல கனடாவை அண்மிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இல்லை எனவும் றோயல் கனடா மொமன்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடியத் தமிழர் பேரவை வன்கூவரில் இருந்து நேரடியாக வழங்கும் மேலதிக தகவலின் படி குடிவரவு மற்றும் அகதிகளுக் கான சபை கடந்த 23 ஆம் திகதி 4 மணிவரை தடுத்து வைத்துள்ளவர்களில் 85 பேருடன் (70ஆண்கள், 15 பெண்கள்) ஏழு நாட்களின் பின்னரான தடுப்பு மீளாய்வு விசாரணைகளை நடத்தியுள்ளது.

இவ்விசாரணை IRB வன்கூவர் அலுவலகத்திலும் (பெண்கள்), பிரேசர் (Fraser Maple Ridge,BC) பிராந்திய தடுப்பு மையத்திலும் ஆண்கள் தொடர்கிறது. 10 தொடக்கம் ஏழு நாட்களின் பின்னரான விசாரணைகள் (பெண்கள்) கடந்த 23 ஆம் திகதி முடி வடைந்தது. நேற்று முன்தினம் 4 மணி வரை மொத்தமாக 95 விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இதுவரை நடந்த விசாரணைகள் அனைத்திலும் உரிய அடையாளங்கள் கொடுக்கப்படாததால் தொடர்ந்தும் தடுப்பில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட விசாரணைகள் முப்பது நாட்களுக்குள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழு நாட்களின் பின்னரான தடுப்பு மீளாய்வு விசாரணைகள் நேற்று ஆரம்பமானது. (6-2)

# யாழ். குடாநாட்டின் இன்றைய காலநிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலையானது இன்று காலை அல்லது நண்பகல் வேளையில் சீராகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

அத்துடன் நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்று காலை 8.30 மணி வரையுள்ள 24 மணித்தியாலத்தில் 21.8 மி.மீ மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (6-2)

# மகாவலிகங்கையில் குளிக்கச் சென்று காணாமல் போனோரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

பேராதனைப் பகுதியில் மகாவலிகங்கையில் குளிக்கச் சென்று காணாமல் போன ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவரில் மூன்றாமவரது சடலமும் மீட்கப்பட்டுள்ளது. நேற்று காலை பொல்கொல்ல பகுதியில் இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன மூவரில் இரண்டு பேரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

பேராதனை இராணுவ முகாமுக்கு அருகில் மகாவலி கங்கையில் குளிக்கச் சென்ற போது இம் மூவரும் காணாமல் போயிருந்தனர். கொழும்பில் இருந்து கண்டிப்பகுதிக்கு யாத்திரை சென்றிருந்த தாய், மகள் மற்றும் மகன் ஆகியோரும் காணாமல் போயிருந்தனர். (6)




## சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுப்பார்க...

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியருகில் வெட்டப்பட் ... தற்போது தூர்ந்து மேடாக காணப்படுகிறது.

இது குறித்து யாரும் அக்கறை கொள்வதாகத் தெரியவி ... காலமாக இவ்வடிகால் செப்பனிப்படாதுள்ளது.

இதனால் மாரி காலத்தில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரி ... லிலடங்காதவை. நுளம்புத் தொல்லை, தொற்றுநோய்கள் ... றால் மக்கள் படும் துன்பங்களோ அதிகம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் அக்கறை ... காலைப் புனரமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கி...

*எஸ்.சரவண...*

*கொக்குவில்...*

# டெங்கு நுளம்பு பரவுவதை தடுப்போம்! டெங்குவிலிருந்து நம்மை பாதுகாப்போம்!

" டெங்கு" என்பபடும் என்புமுறிச்சான் காய்ச்சல் இலங்கையில் ஓர் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 23 ஆயிரத்து 145 பேர் இதுவரையில் டெங்குநோய் உள்ளவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர். இத்தொகையிலிருந்து 3 ஆயிரத்து 236 பேர் வடமாகாணத்தில் பாதிப்புற்றுள்ளனர் எனவும் 19 பேர் இறந்துள்ளதாகவும் இலங்கை தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினரின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 487 பேர் பாதிப்புற்றுள்ளதோடு 16 பேர் இறந்துள்ளனர் எனவும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேர் பாதிப்புற்றுள்ளதாகவும் மன்னார் மாவட்டத்தில் 214 பேர் பாதிப்புற்றுள்ளதோடு ஒருவர் இறந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவர் பாதிப்புற்றுள்ளதாகவும் வவுனியா மாவட்டத்தில் 527 பேர் பாதிப்புற்றுள்ளதுடன் இருவர் இறந்துள்ளதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

அதனால் இன்று தேசிய ரீதியில்டெங்குக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் முடக்கிவிடப்பட்டுள்ளன.எனவே நாம் அனைவரும் டெங்கு நோய் பற்றி விழிப்புணர்வு பெற்றிருப்பது அவசியமாகும்.


Aeds வகை வைரஸ் (Aedes ag gypti, A albopietus) தொற்று ஏற்பட்ட நுளம்புகள் கடிப்பதனால் இந்நோய் பரவுகின்றது. இது ஒருவரில் இருந்து மற்றவரிற்கு தொற்றுவது இல்லை. குறித்த டெங்கு நோயாளியைக் கடித்த நுளம்பு மற்றொருவரை கடிப்பதன் மூலமே இந் நோய் பரவுகின்றது. இந் நுளம்புகள் பகலிலேயே மனிதர்களை கடிக்கின்றது. பொதுவாக அதிகாலையிலும் பிற்பகலிமே இந் நுளம்புகள் கடிக்கின்றபடியால் உங்கள் வேலைத்தளம், பாடசாலை பிரயாணங்களின் போது மிகவும் விழிப்போடு இருங்கள்.

இந்நோயின் பொதுவான அறிகுறிகளாக , அதிகரித்த காய்ச்சல், தலையிடி ,கை, கால் முண்டம் சிலருக்கு உடல் முழுவதும் சிவந்த புள்ளிகள் (Petechial rashes) தசை மற்றும் மூட்டு வலி, வாந்தி , நிணநீர்க் கணுக்கள் வீங்குதல் என்பன காணப்படுகின்றன. சாதாரணமாக இவ் அறிகுறிகள் 3 தொடக்கம் 4 நாட்களிற்குள் குறைந்துவிடும்.

இவ் அறிகுறிகள் தொடர்ந்தும் இருக்குமாயின், அது குருதிப் பெருக்கினை ஏற்படுத்தும் டெங்குவாக (DHF) இருக்கலாம். இதில் பொதுவான அறிகுறிகளிற்கு மேலதிகமாக,

- சிவந்த புள்ளிகள் (Petechial rashes)
- மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்
- தாடைகளிலிருந்து இரத்தம் வடிதல்
- வாந்தி, மலம் மண்நிறமாக அல்லது கறுப்பு நிறமாக வெளியேறல்
- தொடர்ச்சியான மற்றும் கடுமையான வயிற்றுவலி
- ஈரல் பருத்துக் காணப்படல்

மேற்குறித்த அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்தியசாலையொன்



றிற்கு சென்று வைத்திய உதவியினை நாட வேண்டும். சில நோயாளர்கள் திடீரென காய்ச்சல் குறைந்து போவதுடன் அவதியுடனும் காணப்படலாம். அப்படியாயின் அதிர்ச்சி (Shock State) நிலையாகக் காணப்படலாம். எனவே நோயாளியை இந்நிலையில் கவனத்தோடு அவதானித்தபடி இருக்க வேண்டும்.

### டெங்கு கட்டுப்பாடும் சுதேச மருத்துவத்தின் பங்கும்

டெங்குநோயை நாம் மூன்று வழிகளில் கட்டுப்படுத்த முடியும்

அவையாவன

1. பௌதீக ரீதியில் கட்டுப்படுத்தல் (Physical Control)

சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.நீர் தேங்கும் கொள்கலன்களை அகற்றுவதன் மூலமும் அழிப்பதன் மூலமும் கட்டுப் படுத்தலாம்.

2. உயிரியல் ரீதியாகக் கட்டுப்படுத்தல் (Biological Control)

முன்னர் இக்கட்டுப் பாட்டில் சில திலாப்பியா வகை மீன் இனங்களை வளர்ப்பதன் மூலம் நுளம்புகள், குடம்பிகளை அழித்தனர்.

இந் நுளம்புக் கட்டுப்பாட்டில் மருத்துவ குணம் மிக்க மூலிகைத் தாவரங்களின் பங்கு முக்கியமானதாகும் என தற்காலத்தில் கருதப் படுகின்றது. அதாவது நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் கீழ்வரும் தாவரங்களை சுற்றுப்புற சூழலில் வளர்ப்பதன் மூலம் இதனை அமுல்படுத்தலாம்.இது சூழலிற்கு நட்புடை மையான நுளம்புக் கட்டுப்பாடு (Eco Friendly Mosquito Control) ஆகும்.

எலுமிச்சம்புல் (Lemon grass) - <u>*Cymbologon citratus*</u>

திருநீற்றுப்பச்சை (Basil) -<u>*Ocimum basillicum*</u>

வேம்பு (Neem tree) - <u>*Azudirachla indica*</u>

கராம்பு -(Cloves) -<u>*Syzygium aromctium*</u>

யூக்கலிப்டஸ் (Eucalyptus) - <u>*Eucalyptus gobulus*</u>

3.இரசாயன ரீதியில் கட்டுப்படுத்தல் (Chemical Control)

இக்கட்டுப்பாட்டிலும் சுதேச மருத்துவம் தனது தனித்துவமாக பங்களிப்பினை செய்ய முடியும். இதற்கு தாவரத்தினை கொண்ட நுளம்புத்திரிகள் (Mosquito repellent coils), நுளம்பினை துரத்தும் மெழுகுதிரிகள் (Mosquito repellent candles) இனை குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட 5 தாவரங்களில் ஒன்றின் (Essential Oil) 10 துளிகள்களுடன் 2 மேசைக்கரண்டி மரக்கறி எண்ணெய் அல்லது ஒன்று தொடக்கம் 25 துளிகள் காரத்துடன் 32 மேசைக்கரண்டி மரக்கறி எண்ணெய் அல்லது ஒன்று தொடக்கம் 25 துளிகள் சாரத்துடன் 2 மேசைக் கரண்டி மரக்கறி எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய்யுடன் ஒரு மேசைக்கரண்டி கற்றாளை ஜெல் (Aloevera gel ) சேர்த்து அதனை ஒன்றாக ஓர் கண்ணாடிப் பாத்திரத்தினுள் இட்டு நன்றாக குலுக்கி கலவையில் சில துளிகளை உடற்தோலிலோ உடுபுடவையிலோ தெளித்து விடவும்.இது நுளம்பு நம்மை நெருங்குவதைத் தடுக்கும்.

இதனை ஆழ்ந்து சிந்திக்கும் போது, நுளம்பினால் ஏற்படும் அநேகமான நோய்களினை கட்டுப்படுத்துவதற்கு மிகவும் மலிவான ஆயுதம் மருத்துவக் குணம் மிக்க தாவரங்கள் என்பது தெளிவாகும்.

**எனினும் பிரதம செயலாளர் வடமாகாணம் அவர்களின் NP/PCC/Dengue/01/2010 சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து மாவட்டங்களிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டுள்ளன.இதில் நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து சுத்தம் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிப்பட்டுள்ளது.இதன் பிரகாரம் செடி,கொடிகள் வெட்டப்பட்டு அகற்றப்படும் போது இவ்அரிய மருத்துவ குணமிக்க தாவரங்களும் அழிக்கப்படுகின்றன. அழிக்கப் படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். இதனை நுளம்புக் கட்டுப்பாடு செயற்றிட்டத்தினை அமுல்படுத்தும் போது கருத்தில் கொள்ளப்ப டவேண்டியது அவசியமாகும்.**

Dr.S.குமுதினி
மருத்துவ உத்தியோகத்தர்,
திட்டமிடற்பிரிவு,
சுதேச மருத்துவ திணைக்களம்
வடமாகாணம்.

மேலும் Aeds நுளம்புப் பெருக்கத்திற்கு காரணமாக "பூகோள வெப்பமாதல்" (Global Warning) இனை உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகின்றது.பூகோள வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதில் தாவரங்களின் பங்கு கணிசமானதாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

*"நாம் விழிப்போம் டெங்குவை ஒழிப்போம்"*

# தமிழ் மக்களின் துயரங்கள் குறித்து பேசுபவர்களை பயங்கரவாதிகளென குற்றஞ்சாட்டும் இலங்கை அரசு

## நெப்ரஸ்கா வெஸ்லியன் பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் அடைக்கலத் தஞ்சம் கோரும் தமிழ் மக்களை வெளிநாடுகளுக்கு கொண்டு வருபவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளதாக கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் [illegible]னி வகிஸ்வர தெரிவித்துள்ள [illegible]நத்து குற்றம் மிகுந்தது என [illegible]ஸ்லியன் பல்கலைக்கழகத் [illegible]ஞ்ஞான பீடத்தை சேர்ந்த [illegible]பேட் ஒபேர்ஸ்ட் தெரிவித் [illegible] ஊடகம் ஒன்றிற்கு [illegible]ணலின் போது அவர் [illegible]த்துள்ளார்.

[illegible]த்தவை வருமாறு, இந்த [illegible]த்துவதற்கு சித்திராங்கனி [illegible]ங்கையில் தமிழ் மக்கள் [illegible] கிழக்கு பகுதிகளுக்கு [illegible]ரிப்பாளர்களை அனுப்பி வைப்பதற்கு அவர் தனது அரசுக்கு கோரிக்கை விடுக்கலாம். அவர்கள் அங்குள்ள நிலைமைகளை வெளி உலகிற்கு தெரிவிப்பார்கள்.

தனது அரசுக்கு ஆதரவாக ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை அவர் மேற்கொள்ளக் கூடாது. இந்தியாவில் தங்கியுள்ள 1இலட்சத்து 3 ஆயிரம் தமிழ் அகதிகள் மீண்டும் இலங்கை செல்வதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதாக தமிழக புனர்வாழ்வுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது பிரச்சினைகள் உள்ளதால் அவர்கள் திரும்பிச்செல்ல விரும்பவில்லை. அதனை சித்திராங்கனி தனது கருத்தில் எடுக்கவில்லை. தமிழ் மக்களை நீதி மன்றத்தின் முன் நிறுத்தாது நீண்டகாலம் தடுத்துவைக்கும் அதிகாரங்களை படையினருக்கு வழங்கும் போர்க்கால அவசரகாலச் சட்டம் தற்போதும் இலங்கையில் நடைமுறையில் உள்ளதையோ அல்லது வடக்கில் தமிழ் மக்களின் பெருமளவான காணிகளை தளங்களை அமைக்கும் நோக்கத்துடன் இலங்கை படையினர் கையகப்படுத்தி வருவதையோ சித்திராங்கனி குறிப்பிடவில்லை.

படையினரின் இந்த நடவடிக்கைகளினால் தமிழ் விவசாயிகள் தொழில் செய்ய முடியாது துன்பப்படுகின்றனர். வெளியார் தமிழ் மக்களின் பிரதேசங்களுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களை கேட்டறிய முடியாத நிலையை ஏற்படுத்திய பின்னர் இலங்கை அரசு இதனை மேற்கொண்டு வருகின்றது.



தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பில் யாரும் கேள்வி எழுப்பினால் அவர்கள் குற்றவாளிகள் என அரசு குற்றம் சுமத்தி வருகின்றது. அதனை தான் சித்திராங்கனி மேற்கொண்டு வருகின்றார். அவர்களை பயங்கரவாதிகள் என இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்து வருகின்றார்.

ஒரு நாடு எதனையும் மறைக்கவில்லை என்றால் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடத்தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

# மஹிந்தவின் கோரிக்கையால் ரணில் அதிர்ச்சிக்குள்ளானார்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த 23ஆம் திகதியன்று மூன்றாவது முறையாகவும் சந்திப்பு இடம்பெற்ற போது ரணில் விக்கிரமசிங்க அதிர்ச்சிக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருந்தது.

எனினும் இதற்கு பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இணக்கத்தை மாற்றி ஜனாதிபதி முறைமையை மாற்ற விரும்பவில்லை என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 23ஆம் திகதியன்று இடம்பெற்ற சந்திப்பின் போது தாம் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக வருவதற்கு உதவவேண்டும் என ஜனாதிபதி ரணிலிடம் கோரியுள்ளார்.

இதன் போது அதிர்ச்சிக்குள்ளான ரணில் விக்கிரமசிங்க எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என ஐக்கிய தேசியக்கட்சி தரப்புகள் தெரிவித்துள்ளன. (6-2)

# கடந்தாண்டு மதுவரித்திணைக்கள வருமானம் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

மதுவரித் திணைக்களத்திற்கு கடந்த 2009ஆம் ஆண்டு வரி வருமானமாக 2ஆயிரத்து 851 கோடி ரூபா கிடைத்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் வசந்த ஹபு ஆராச்சி தெரிவித் துள்ளார்.

அத்தோடு மதுவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களினால் திருட்டு தயாரிப்புக்கள் நூற்றுக்கு 19 வீதம் குறைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் மாத்திரம் 45ஆயிரத்து 737 சுற்றிவளைப்புக்கள் நடத்தப்பட்டன. அத்தோடு 2008ஆம் ஆண்டை விட சாராய உற்பத்தி நூற்றுக்கு 10 வீதம் குறைந்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (6-2)

# வடக்கு உட்பட ஐந்து மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

வடக்கு உட்பட 5 மாவட்டங்களில் உலக வங்கி நிதியுதவியின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறிய நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் நெற்செய்கைக்கான காணிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்ததுக்கு உலக வங்கி 6500 மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

அடுத்த பெரும் போகத்தின் போது தெரிவு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி மன்னார் மாவட்டத்தின் 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் வவுனியாவில் 900 ஏக்கர் நிலப்பரப்பிலும் இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (6-2)

# தமிழகக்கட்சிகளின் ஒன்றிணைவு குறித்து அவதானம் செலுத்துமாறு அரசுக்கு அறிவுரை

## எல்லாவல மேதானந்த தேரர் விடுத்துள்ளார்

(கொழும்பு)

சிறுபான்மை அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமய தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவு மீண்டும் இனவாதப் போராட்டம் ஒன்றிற்கான அடித்தளமாக அமைந்துவிடக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் கூறுகையில்,

அரசியலமைப்பு மாற்றம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிப்பும் தற்போது இலங்கைக்கு தேவையற்ற விடயங்களாகும்.

அநாவசியமான வேலைகளில் அரசாங்கம் காலத்தை வீணடிக்கையில் சிறுபான்மை அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து வருகின்றன.

இந்த நிலையானது நாட்டின் எதிர்கால இலக்குகளை அடைய முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும். யுத்தத்தின் பின்னர் இலங்கையை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதே அனைவரதும் பணியாகும்.

இந்த இலக்கை அடைவதற்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

அப்போது தான் தனி நாடென்ற வகையில் ஏனைய உலக நாடுகளுடன் போட்டி போட முடியும்.

அரசாங்கம் ஏனைய எதிர்ப்பு அரசியல் கட்சிகளும் தமது சுய விருப்பு வெறுப்புக்களுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட தொடங்கினால் நாடு சின்னாபின்னமாகிப் போய்விடும்.

பொது மக்கள் இலங்கையின் எதிர்காலம் குறித்து மிகவும் பங்களிப்புடன் உள்ளனர். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அரசியல் தலைமைத்துவங்கள் தூய சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

எந்தவொரு அரசியல் கட்சியும் தேசியத்துவத்திற்கும் அப்பாற் சென்று செயற்பட இடமளிக்க முடியாது சிறுபான்மை அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படலாம். அது ஜனநாயக உரிமை ஆனால் அதுவே நாட்டின் பிரச்சினைகளுக்கான ஒன்றிணைவாக அமைந்துவிடக்கூடாது என்றார். (6-2)

# 26.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- ✠1768-கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தான்.
- ✠1914-முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் குடியேற்ற நாடான டோகோலாந்து பிரெஞ்சு மற்றும் பிரித்தானியர்களினால் முற்றுகைக்குள்ளானது.
- ✠1914-முதலாம் உலகப்போர்: ஜேர்மனிப் படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.
- ✠1920-ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ✠1942-உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜெர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியகற்றி குழந்தைகள் நோயாளிகள் உட்பட 500 பேரை கொன்று குவித்தனர்.
- ✠1957-கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- ✠1972-22வது ஒலிம்பிக் போட்டிகள் ஜெர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.
- ✠1978-முதலாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராக பதவியேற்றார்.
- ✠1978-முதலாவது ஜெர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.
- ✠1993-யாழ்ப்பாணம், கிளாலியில் இரண்டு இலங்கைக் கடற்படைப் படகுகள் கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.
- ✠1997-அல்ஜீரியாவில் 60க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.
- ✠2006-திருகோணமலை மூதூர் கிழக்கில் சிறிலங்கா விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் பொதுமக்கள் இருவர் பலியாகினர்.

## பிறப்புகள்

- ✠1880-கியோம் அப்போலினேர், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1918)
- ✠1883-திரு.வி.கலியாணசுந்தரனார். தமிழறிஞர் (இ. 1953)
- ✠1927-அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் (இ. 1989)
- ✠1933-வி.தெட்சணாமூர்த்தி, ஈழத்து தவில் கலைஞர் (இ.1978)
- ✠1934-ஏ.ஜே.கனகரட்னா, ஈழத்து இலக்கியவாதி (இ. 2006)
- ✠1952-பொன். சிவகுமாரன், ஈழ விடுதலைப் போராட்டத்தில்சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளி (இ. 1974)
- ✠1956 - மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி

## 1910 அல்பேனிய உரோமன்

கத்தோலிக்க அருட்சகோதரி அன்னை திரேசா பிறந்த நாள் நோபல் பரிசு பெற்றவர் (இ.1997)



# ஈழத்தவர் வரலாறு

16

## 3. ஈழராஜா எல்லாளன்

சீலமயமான வாழ்க்கையொன்றை மேற்கொண்ட விகாரமகாதேவிக்கு இப்படியான குரூர ஆசைத்தனம் ஏற்பட்டதென்று மகாவம்சம் குறிப்பிடுவதன் மூலம் அவளின் பாத்திரத்தைச் சிதைத்துள்ளது. துட்டகாமினியைத் தன்னிகரற்ற வீரபராக்கிரமம் வாய்ந்தனவாகக் காட்டுவதே மகாவம்சத்தின் நோக்கம். தமிழ் மக்களுக்கு இந்த வகையில் மகாவம்சம் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என இலங்கை பாளி, பௌத்த பல்கலைக் கழகப் பேராசிரியர் கும்புருகமுவே விஜிஹிமி குறிப்பிடுகிறார்.

விகாரமகாதேவியினதும் காக்கவண்ணதீசனது மூத்தமகன் காமினி அபயனாவான், இவன் தந்தையின் சொல்கேளாது இருந்தமையால் பிற்காலத்தில் துட்டகாமினி என அழைக்கப்பட்டான். அவனது தம்பியே சத்தாதீசனாவான்.

துட்டகாமினி கருவிலிருந்தே தமிழருக்கு எதிரானவனாக உருவாக்கப்பட்டான். விகாரமகாதேவி தமிழருக்கெதிரான துவேஷத்தை அவனுக்கு ஊட்டி வளர்த்தான். " ஒருமுறை காக்கணவண்ணதீசன் தன்னிரு பிள்ளைகளிடமும் மூன்று வேண்டுகோள் விடுத்தான். பௌத்த சங்கத்தினருக்கு எப்பொழுதும் பணிவாக இருக்கவேண்டுமென்றும் சகோதரர்கள் இருவரும் ஒருவரோடொருவர் சண்டைபிடிக்கக் கூடாதென்றும், தமிழர்களோடு போர்புரியக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டபோது, முதலிரு வேண்டுகோள்களையும் ஏற்ற சகோதரர்கள் மூன்றாவது கோரிக்கையை ஏற்கவில்லை. துட்டகாமினி விரைந்து எழுந்து சென்று கட்டிலில் கால்களை முடக்கிப் படுத்துக்கொண்டான். தாய் வினவியபோது, " வடக்கே மகாவலி கங்கைக்கு அப்பால் தமிழரும், தெற்கே சமுத்திரமும் நெருகும் போது, எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்கமுடியும்?" என்றானென மகாவம்சம் கூறுகிறது.

**3.3 எல்லாள -துட்டகாமினி யுத்தம்**

காக்கவண்ணதீசனின் மரணத்தின் பின்னர் துட்டகாமினி உருகுணையின் மன்னனான். காக்கவண்ணதீசன் தயார்ப்படுத்தி வைத்திருந்த பெரும் சேனையுடன், தான் தயார்ப்படுத்திய வீரர்களுடனும் அநுராதபுரத்தினை நோக்கிப்படை நடாத்தினான். அவனுடன் திசமகராமை விகாரையைச் சேர்ந்த ஐந்நூறு பிக்குகளும், தாய் விகார மகாதேவியும் கூடவே சென்றனர்.

துட்டகாமினி எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்கு இனத்தோடு மதத்தையும் முன்வைத்தான். " நான் அரச போகங்களுக்காக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காகவே போர் தொடுக்கின்றேன்" என்ற கவர்ச்சிகரமான சுலோகத்தையே அவன் முன்வைத்தான். உண்மையில் எல்லாளனுக்கு எதிராக சமய ரீதியாகவோ இனரீதியாகவோ எதிர்ப்பு ஏற்பட எவ்வித அடிப்படையும் கிடையாது. நேர்மையும் பாரபட்சமின்மை யும் கொண்ட நீதிமிக்க அரசன் அவன். எல்லாளன் போன்ற செங்கோல் அரசன் ஒருவனை முறியடிப்பது இலகுவல்ல.

எனவே தான் அவன் அந்தக் கவர்ச்சிகரமான சுலோகத்தைப் பயன்படுத்தினான். பௌத்த பிக்குகள் யுத்தமொன்றுடன் தொடர்புபடும் சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் தடவை.

மகாவலிகங்கை மருங்கே எல்லாளனின் இராணுவத் தளங்கள் அமைந்திருந்தன. மகியங்கனையில் முதன் முதலாகத் தமிழ்ப்படையினருக்கும் துட்டகாமினியின் படைக்கும் சண்டை மூண்டது.


அதனைத் தொடர்ந்து அம்பதீர்த்தம், சர்ப்பக்கோட்டை, அந்த சொப்பம், நாளி சொப்பம், கச்சதீர்த்தம், கொத்த நகரம், நந்திக்கிராமம், விஜிதபுரம் முதலான தமிழரின் படையரண்களைத் தன் படை வலிமையாலும் தந்திரத்தாலும் துட்டகாமினி வெற்றி கொண்டான்.



மகாவலி கங்கை

அம்பதீர்த்தம் என்றவிடத்தில் அமைந்திருந்த எல்லாளனின் படையரணை, நான்கு மாதங்கள் முற்றுகையிட்டும், துட்டகாமினியால் வெற்றிகொள்ள முடியவில்லை. அம்பதீர்த்தத்தின் படைத்தளபதி தித்தம்பன் பெண் விடயத்தில் மிகவும் பலவீனமானவன். அம்பலவீனத்தைத் துட்டகாமினி தனது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டான். தனது தாய் விகாரைமகாதேவியை தித்தம்பனின் முன்பார்வைக்கு நிறுத்தினான் என மகாவம்சம் கூறுகிறது.

**(கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)**



திஸ்ஸமகாராம தூபி


கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்


மகாவம்சம் கூறுகின்ற இந்த சந்தேகக் குறிப்பிலிருந்து சரியான அனுமானத்தைப் பெறுவது கடினமெனவும், எனினும் திக்கா நூலின் படி எதிரியுடனான தாயின் திருமணத்திற்கு அரசியல் இலாபம் கருதிய துட்டகாமினியின் சம்மதம் இருந்தது என மகாவம்சத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பாளரான கெய்கர் அந்நூலின் அடிக்குறிப்பில் குறித்துள்ளார்.

(தொடரும்)

# பல மொழிகளுக்கு தமிழே மூல வரிவடிவம்

5





அட்டவணையில் இந்தியாவின் திராவிட மொழிகளினையும் இந்திய ஆரிய மொழிகளினையும் அத்தோடு சிங்கள மொழியினையும் அவைகள் தோன்றிய கால வரிசைப்படி அந்தந்த மொழிகளின் அகர வரிசையினைப் பார்க்க முடியும்.

தமிழின் தொன்மையும் அதன் நீண்ட வரலாறும் சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளும் தென்னாட்டில் கிடைக்கப் பெற்ற குகைக் கல்வெட்டுகளும் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் காணப்படும் வரிவடிவங்களும் தொல்காப்பியத்தின் தொன்மையான வரலாறும் ஏனைய மொழி வரிவடிவங்களில் எவ்வாறான தாக்கத்தினையும் செல்வாக்கினையும் செலுத்தியது என்பதனை அறிய முடியும்.

♦ அட்டவணையில் காணப்படும் தமிழின் எழுத்துக்கள் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக வட்டெழுத்தாக மாற்றம் பெறுகின்றன.

♦ வடமொழி தனது சொந்த வரிவடிவத்திலிருந்து மாற்றம் பெற்று வட்டெழுத்தாக கிரந்தம் என்ற பெயருடன் கி.பி. 500 ஆண்டளவில் தென்நாட்டிற்கு அறிமுகமாயிற்று. இக்காலத்தேதான் பல்லவப் பேரரசர்கள் ஆரியச் செல்வாக்கினைத் தென்நாட்டில் வேரூன்றச் செய்யும் நோக்கோடு தமிழோடு இணைந்த ஒரு வரிவடிவத்தினை கிரந்தமாகத் தோற்றுவித்து தென்நாட்டில் புகுத்தினார்கள். முதன் முதலில் கிரந்தமே தமிழ் வரிவடிவத்தினையொற்றிப் பிறந்த மொழியாகும். சமஸ்கிருத எழுத்துக்கள் நேர் கோட்டு வரிகளைக் கொண்ட எழுத்து வடிவத்தால் அமைந்தது. ஆனால் அதன் அ மற்றும் ஆவன்னாவிலும் தமிழ் அ. ஆ. வன்னாவின் வட்டெழுத்துச் சாயல் காணப்படுகின்றது.

♦ சிந்துவெளியில் வாழ்ந்த திராவிடர்களே இந்தியாவின் ஆதிக் குடிகளாகளாவும் சிறப்புடன் கட்டிடக் கலை, சிற்பக்கலை, உலோகப் பயன்பாட்டுக்கலை, நகர நிர்மாணம், மண்பாண்ட பாவனையில் தங்கள் மொழியினைப் பதிவுசெய்யும் கலை போன்றவற்றை அங்கு வாழ்ந்தவர்களே இந்திய நாட்டிற்கு அறிமுகம் செய்தார்கள். அவர்கள் எழுதி வைத்த சித்திர எழுத்து வடிவங்களே இந்தியாவின் முதல் எழுத்து வடிவங்களாகும்.

இந்த சித்திர வடிவங்களே முதலில் மனிதன் பேசும் மொழியின் கருத்தினை எழுத்தில் வடிக்க படைக்கப்பெற்ற வரிவடிவம் ஆகும். இதிலிருந்து பிறந்த தமிழிலிருந்தே ஏனைய மொழிகளும் அடியொற்றி பின்பற்றியிருக்க முடியுமேயல்லாமல் வேறு எக்காரணிகளும் அந்தந்த மொழிகளின் வரிவடிவம் தோன்றக் காரணமாயிருக்க முடியாது.

♦ தமிழில் முதல் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இதன் காலம் கிறிஸ்துவுக்கு முன் முந்நூறு என்று பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழில் தொல்காப்பியம் எழுதப்பட முன்னர் ஒரு சில இலக்கிய வடிவங்கள் இருந்திருக்க வேண்டுமென சிந்திக்கும் எவருக்கும் உதிக்கும் ஒரு உண்மையாகும்.

**செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை**

முருகேசு பாக்கியநாதன் B.A

காரணம் அதில் படைக்கப்பெற்ற எழுத்ததிகாரம் ,சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பவற்றுக்கான இலக்கண வடிவம் ஏற்கனவே எழுதப்பட்டிருந்த ஒரு இலக்கிய வடிவத்திற்கோ அன்றி ஒரு திருந்திய மொழிக்கோ எழுதப்பட்டிருக்கவேண்டும். அல்லதுவிட்டால் வெறுமையிலிருந்து ஒரு மொழியின் இலக்கணத்தை படைக்கமுடியாது. ஆகவே தமிழ் எழுத்து வரிவடிவம் கி.மு.விற்கு முற்பட்ட கி.மு 500ஆகக் கருதப்பட முடியும்.

(தொடரும்)

# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

12

பிள்ளையொன்றைப் பாடசாலையிற் சேர்க்கும் வயதெல்லை ஆறு வயதாக மாற்றி அமைக்கப்பட்டது. உத்தேச கல்வித் திட்டம் மூலம் கல்வித்துறையில் இம்மாற்றம் ஒரு குறிப்பிடத்தக்க புதிய நடவடிக்கை எனலாம். ஆறு வயது பள்ளியில் சேரும் பிள்ளை பதினொராம் வயது முடியும் வரைக்கும், அதாவது ஐந்தாம் வகுப்பின் இறுதி வரைக்கும் ஆரம்பக்கல்வியை பெறுகின்றது. 12 வயது தொடக்கம் 15 ஆம் வயது வரை அல்லது 6 ஆம் வகுப்புத் தொடக்கம் 9 ஆம் வகுப்பு வரை வழங்கப் படுவது கனிஷ்ட இடைநிலைக் கல்வியாகும். முன்னைய காலங்களில் காணப்பட்டது போல விஞ்ஞானம், வணிகம், கலை என்று மாணவர்களைப் பாடத்துறையில் அடிப்படையில் பகுக்கும் முறை கைவிடப்பட்டு மாணவர்கள் அனைவரும் சகல பாடங்களையும் கற்கும் வசதி அளிக்கப்பட்டது. செயல்முறைக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும் அரசு பாடசாலைக்கட்டிட வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செலவுசெய்தது கிராமப்புற, நகரப்புறங்களில் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. கல்வி வளர்ச்சிக்காக அரசு செலவு செய்யப்பட்ட தொகையைப் பின் வரும் அட்ட வணை மூலம் அறியலாம்.

கிராமப் புற பாடசாலைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. கிராமப்புற பாடசாலைகளுக்கு 1970 -71, 1971-72, 1972-73 ஆண்டு காலப்பகுதிகளில் முறையே 83.3%, 90.1%, 89.4% ஆக கட்டிடங்களுக்குச் செலவு செய்யப்பட்டது. பாடசாலைகள் தொகையும் அதிகரிக்கப்பட்டது. மேலும் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் கிராமப் புறங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. 1972 ஆம் ஆண்டு புதிய கல்வித் திட்டத்தின் படி கிராமப்புற பாடசாலைகளிலும் உயர்தர விஞ்ஞான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறாக இக் காலப் பகுதியில் கல்விக் கொள்கையிலே அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த வகையில் 1972 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதற்கு முன் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் கல்விப் பரப்பை முழுமையாக நோக்காது, குறிப்பிட்ட அம்சங்களில் மட்டுமே கவனத்தைச் செலுத்தி இருந்தது எனலாம். இக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பாட ஏற்பாடுகளும், பரீட்சைமுறைகளும் முற்றிலும் புதியவை. பாடசாலைக்

*பாடசாலைக்கட்டிடங்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகை*

| ஆண்டு | மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை | கிராமப்புறப் பாடசாலைகளுக்கு செலவிட்ட தொகை | நகரப் பாடசாலைகளுக்குச் செலவிட்ட தொகை | கிராம செலவு% | நகர செலவு% |
|---|---|---|---|---|---|
| 1970-71 | 15280798 | 13639470 | 1641328 | 83.3 | 16.7 |
| 1971-72 | 16078764 | 14489179 | 1589915 | 90.1 | 9.9 |
| 1972-73 | 18479183 | 16528545 | 1951248 | 89.4 | 10.6 |

*மூலம்:-அறிவு.கல்வி அமைச்சு வெளியீடு,1973*

புதிய கல்வித் திட்டத்தின் படி கிராமப்புற, நகரப்புற பாடசாலைகளுக்கிடையே வசதிகளில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டது. புதிய கட்டிடங்களை அரசு அமைக்கும் போது

காலம் 11 வருடமாகக் குறைக்கப்பட்டமையினால் மாணவர்கள் விரைவில் பாடசாலையை விட்டு வெளியேறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மற்றும் சில பாட பகுதிகள் போதிய முற்னேற்றப்பாடுகள் இன்றி அறிமுகம் செய்யப்பட்டதனால் (தொழில் முன்னிலைப்பாடம்) அவையும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை இதனால் காலப்போக்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் கல்விக் கொள்கையிலே மாற்றங்களை ஏற்படுத்துவதை காணமுடிகிறது.

1977 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்குப் பின் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நடைமுறையில் கல்வி தொடர்பாக அதிகம் வேறுபாடு காணப்படவில்லை. எனினும் தேசிய கல்விபொதுச் சான்றிதழ் பரீட்சைக்குப் பதிலாக முற்பட்ட காலப்பகுதியில் காணப்பட்ட கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையையும், தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்கு பதிலாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையும் மீண்டும் கொண்டு வரப்பட்டது. இதனால் பாடசாலைக்காலமும் 13 வருடங்களாக மீண்டும் கொண்டுவரப் பட்டதுடன் பாடசாலை அமைப்பு முறையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது. அம்மாற்றங்கள் பின்வருமாறு

1. ஆரம்நிலை - பாலர்வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை
2. கனிஷ்ட இடைநிலை 6-10 ஆம் வகுப்பு வரை
3. சிரேஷ்ட இடைநிலை 11-12 வரை

இம்முறையிலே பத்தாம் வகுப்பு வரையில் பொதுக்கல்வி பாட ஏற்பாடு இடம்பெற்றது. சிரேஷ்ட இடைநிலையிலே கலை, விஞ்ஞானம் என்ற இரு பிரதான துறைகளாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் வர்த்தகத் துறையும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்நிலைமையானது இக்காலப்பகுதியை அடுத்து 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கை ஊடாக மாற்றமடைந்தது. சமூக பொருளாதார அரசியல் நல்லொழுக்கத் தேவைகளை வழங்குமுகமாகச் சிபார்சுடன் முன்மொழியப்பட்டன. பொதுக்கல்வி மூலம் புகுத்தப்பெறஉள்ள மாற்றங்கள் பாடசாலை அமைப்பு பாடவிதான மீள அமைப்பு பாடநூல்கள், பரீட்சைகள் தொடர்பான மாற்றங்கள் பிள்ளையின் வளர்ச்சியின் பயனுறுதி வாய்ப்பை மேம்படுத்துவதோடு பிள்ளைஎதிர்காலத்தில் வாழவும் தொழில் புரியவும் ஏற்றவாறு தயார் படுத்துவதையும் நேர்க்கமாகக் கொண்டனர். ஒரு பிள்ளையின் பாடசாலைக்கல்வி இப்போது உள்ளது போன்று 5 வயது பூர்த்தியான பின்னரே ஆரம்பிக்கும். ஆனால் 6ஆண்டு ஆரம்பக் கல்விக்குப் பதிலாக முதற்பாகம் 5 ஆண்டி னைக் கொண்டதாக இருக்கும் பொதுப் பாடசாலைக்கல்விக்காலத்தில் எஞ்சிய ஆறு ஆண்டு காலத்தில் முதல் மூன்றாண்டுகள் இரண்டாம் பாகத்தினைக் கொண்டதாக ஆறு முதல் எட்டுவரையான தரங்களைக் கொண்டு கனிஷ்ட இடைநிலைக்கட்டம் எனக் குறிக்கப் பெறும். அடுத்த 3 ஆண்டு கள் மூன்றாம் பாகத்தினை சார்ந்து 9முதல் 11 வரையான் தரங்களைக் கொண்ட சிரேஷ்ட இடைநிலைக்கட்டம் எனக்குறிக்கப்படும். 11 ஆண்டுகள் அகற்சிக் கல்வியைத் தொடர்ந்து (12,13 ஆம் தற) கல்லூரிக்கல்வி அறிவு தெட்ட வகையான உயர்கல்வியினை தொடர விளைவோருக்கு உரியது. புதிய நடைமுறையாக 8 ஆம் ஆண்டு முடிவில் ஒரு தேர்வு நடத்தப் படும் அத்துடன் புதிய சிந்தனையாகத் கனிஷ்ட, இடைநிலைக்கப்பால் நூல்சார் கல்வியைத் தொடர விரும்பாதவர்கள் க.பொ.த தொழில்நுட்ப நெறிக்கு போகவும் வழிவகுக்கப்பட்டது. சிரேஷ்ட இடைநிலைக்கப்பால் கல்லூரிசார் மட்டத்திற்கு போகாதவர்களுக் கென மூன்றாம் நிலைக்கல்வி அதிகாரசபை யின் கீழ் இயங்க இருந்த தொழில் நுட்ப வர்த்தக, கவின் கலை தொழில் பயிலுனர் நெறிகள் என்பன முன்மொழியப்பட்டன. அத்துடன் பாடசாலைகளின் சிறந்த முகாமைத்துவத்திற்கும், மூலவளங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்குமான பாடசாலைக் கொத்தணிகள் உருவாக்கப்பட்டமை முக்கியமான சிபார்சாகும்.

பொதுவாக வரையறுக்கப்பட்ட ஒரு புவியிற்புலத்திலே உள்ள பாடசாலைகள் ஒரு கொத்தணியாக தொகுக்கப் படும் நல்லதோர் அமைப்பு முறையையும், அபிவிருத்தியையும் உருவாக்குவது இதன் நோக்கம் இதனால் அரசு சமுதாயம் ஆகிய இரண்டினதும் மூல வளங்களை திறம்பட பயன்படுத்துவது சாத்தியமாகும். (தொடரும்)

நாகேஸ்வரி விஜயகாந்தன்

## முல்லை.மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டி பணம் மீள வழங்கப்படவுள்ளது

முல்லைத்தீவு மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணம் செலுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நகை அடகு வைத்தவர்கள் மற்றும் வேறு கொடுக்கல் வாங்கல்களின் மூலம் வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப் பட வேண்டிய பணம் விரைவில் செலுத்தப் படும் என மக்கள் வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக 1980 ஆம் ஆண்டு மூடப்பட்ட முல்லைத்தீவு மக்கள் வங்கியானது மிக நீண்ட இடைவெளிக்கு பின்னர் அண்மையில் மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அடகு வைத்த நகைகளுக்காக பெறுமதிகளும், வாடிக்கையாளர்களுக்கும் சேர வேண்டிய ஏனைய கொடுப்பனவுகளையும் வழங்கத் தயார் என வங்கியின் தலைவர் டபிள்யூ.எம். கருணாஜீவ தெரிவித்துள்ளார். (6-2)

## செப்ரெம்பர் 4 முதல் புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளன.

இப்பணிகளுக்காக 10 பிரதான நகரங்களில் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுப் பணிகள் முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் பரீட்சை முடிபுகள் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த ஆண்டுக்கான பாடப் புத்தக விநியோக நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.என் ஜே புஷ்பகுமார தெரிவித்தார்.

ஆயிரத்து 54 மத்திய நிலையங்களூடாக 30 மில்லியன் பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கென 2ஆயிரத்து 700 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-2)

## இரகசிய பேச்சுவார்த்தை குறித்த தகவல்கள் வெளியானதால் சஜித் அதிருப்தி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகள் குறித்த தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளதாக கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கட்சித் தலைவருடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரியவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தகவல்களை கட்சித் தலைமையே அம்பலப்படுத்தியுள்ளதாகவும் இவை திரிபுபடுத்தப்பட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய பதவிகளுக்கான வாக்கெடுப்பின் போது உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை யின் அடிப்படையில் கட்சியின் பிரதித் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள சஜித் பிரேம தாச ஒப்புக் கொண்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

எவ்வாறெனினும் இந்த விடயங்கள் தொடர்பில் ஊடகங்களில் தகவல் வெளியிடப் பட்டமையினால் சஜித் பிரேமதாச அதிருப்தி அடைந்துள்ளார். கட்சித் தலைமையுடன் நடை பெற்று வந்த பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தி அவர் அம்பாந்தோட்டைக்கு திரும்ப உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹசீம், லக்ஸ்மன் கிரியல்ல மற்றும் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோரும் இந்த இரகசியக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் பதவிகளை ஏலத்தில் விட்டு பிரபல்யம் தேடும் முனைப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையினால் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்று வரும் ***வில்லிபாரதம்*** பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு ***பாண்டவர் ஜனனம்*** என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (6-4)

# கிளிநொச்சியில் 18ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன

(கொழும்பு)

கிளிநொச்சியில் சுமார் 18 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாக தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றும் நோக்கில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளதாகவும் 4ஆயிரத்து 780 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உலக வங்கி உதவிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் வடக்கு, கிழக்கு வீட மைப்பு திட்டத்தின் அடிப்படையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

3இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுதி யான வீடுகள் இந்தத் திட்டத்தின் கீழ் நிர்மா ணிக்கப்படவுள்ளன.

இந்தியாவினால் நிர்மாணிக்கப்படவுள்ள 50ஆயிரம் வீடுகளில் 12 ஆயிரத்து 500 வீடுகள் கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார் இதேவேளை, செஞ் சிலுவைச் சங்கம் மற்றும் ஹெபிடாட் போன்ற நிறுவனங்களும் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதாக உறுதியளித்துள்ளன. (6-2)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இழந்தமைக்கு காரணம் புலம்பெயர் தமிழர்களே

## அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும்புலம்பெயர் தமிழர்கள் காரணமாகவே இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போனதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள் ளது.

அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெற் றுக்கொள்வதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய அண்மை யில் குற்றம் சுமத்தியமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் தமது குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதர வான புலம்பெயர்ந்த தமிழர்களின் கருத்துக் களையே ஐக்கிய தேசியக் கட்சியும் கொண் டுள்ளதாக அமைச்சர் கறிப்பிட்டுள்ளார். (6-2)

# மட்டக்களப்பில் வருடாந்த வேல் திருவிழாவை நடத்துவதற்கு பொலிஸார் தடை விதிப்பு

## த.தே.கூ.முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பில் வருடாந்த வேல் திரு விழாவை நடாத்துவதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

மட்டக்களப்பில் ஏற்பாடுசெய்யப்பட்டி ருந்த வேல் திருவிழா மற்றும் சிரமதானப் பணிகளுக்கு பொலிஸார் தடைவிதித்துள்ள தாகவும் இது தொடர்பில் பிரதமரிடம் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

செங்கலடி , கரடியனாறு பிரதேசத்தில் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 3,8 மற்றும் 9ஆம் திகதிகளில் வேல் திருவிழா மற்றும் சிரமதா னம் ஆகியவற்றை நடாத்துவதற்கு உத்தே சிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த நிகழ்வுகளை நடத்தக்கூடாது என பொலிஸார் உத்தரவு பிறப்பித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள் ளார். (6-2)

# அனர்த்த முகாமைத்துவ பயிற்சி

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங் கத்துவர்களுக்கான செயல்திறனை அதிகரித் துக் கொள்வதற்கான அனர்த்த முகாமைத் துவப் பயிற்சியொன்று (PDRT)இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை வரை மாஹோ பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (6-2-134)

# மருந்துக் கொள்வனவு தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டத் திட்டம்

(கொழும்பு)

உரிய மருந்துப் பொருள் கொள்வனவு பற்றி மக்களைத் தெளிவூட்டும் விசேட வேலைத் திட்டமொன்றின் தேவை ஏற்பட் டுள்ளதாகச் சுகாதார அமைச்சின் சுகாதார ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இதனூடாக எதிர்வரும் காலத்தில் மக்க ளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத் துக் கொள்ள முடியும் என அதன் ஊடக இணைப்பாளர் வைத்தியர் சாந்த ஹெட்டி யாராச்சி குறிப்பிட்டார்.

மருந்தகங்களிலிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போது தவறான மருந் துகள் வழங்கப்படுவதை இதனூடாகத் தவிர்த் துக் கொள்ளமுடியும் எனவும் அவர் கூறியுள் ளார். (6-2)


# ஜனாதிபதியின் கொடும்பாவியை எரிக்க முயன்ற 10 பேர் கைது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரிக்க முயன்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 10 பேர் தமிழ கத்தில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் இந்தியா வுக்கு வருகை தந்தமையை ஆட்சேபித்த இவர்கள் கோயம்புத்தூரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன்போது மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரிக்க முயன்றாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (6-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 12 ஆம் திருவிழா




படங்கள் -அரவிந்

## 'நல்லூர் ஒழுங்கினைப் படித்தால் போதுமே!'

நினைந்து உருகிப் பாட எமக்கு
நின்தன் நாமமொன்றே போதும்,
நீண்ட ஆயுள் கிடைக்க எமக்கு
நின்தன் விரதம் ஒன்றே போதும்,
நனைந்த வாழ்வில் மீண்டு எழுந்திட
நின்தன் பூஜை ஒன்றே போதும்
நாளைய சந்ததி திருந்தி மகிழ்ந்திட
நல்லூர் ஒழுங்கினைப் படித்தால் போதுமே!

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

## முருகா சரணம்

பெருகும் கலியிற்கு முருகா சரணம்
அருகும் பண்பிற்கு முருகா சரணம்
உருகும் மனத்திற்கு முருகா சரணம்
கருகும் வாழ்விற்கு முருகா சரணம்
மெய்யினைத்தா தமிழிற்கு சரவணா
பொய்கையின் வேந்தனே கந்தா
வைகல் தண்ணொளி நாளும் நல்கும்
வைகறை மணியொலியுடன் நல்லூரில்

டாக்டர் சி.யமுனானந்தா

## வல்லவனே குறவள்ளி மணாளா

நல்லையிலமர்ந்திடு நறுஞ்சுவைத் தேனே
நண்ணுபவர்க்கருள் புரிந்திடுவோனே
தொல்லைகள் போயிங்கு துயரில்லாவாழ்வு
தொடர்ந்திடவே நீ துணைபுரிவாயே
வல்லவனே குறவள்ளி மணாளா
வருகின்ற புதுப்புது மாயங்கள் போக்கி
வெல்லவரும் வெற்றிக் கொடியுடையோனே
வேலவனே பள்ளியெழுந்தருளாயே

செ.பவானி, வண்ணார்பண்ணை

## மேன்மைபெறச் செய்யுமையா

பார்த்திருந்தும் நீ சும்மா பாராங்கல் போலிருக்க
காத்திருந்து நாமிங்கே காலமெல்லாம் கலங்குவதோ
வீற்றிருந்து மயில்மீது வீதியுலா வருமுனக்கு
காத்திருந்தும் நாமிங்கே கதறுமொலி கேட்கலையோ
பூத்திருக்கும் வண்ணமலர் பொன்னடியைச் சேராமல்
கீழிருந்து காலாலே மிதிபட்டுக் கிடக்கலாமோ
ஆரிருந்தும் என்னபயன் ஆறுமுகா நீயின்றி
மேலிருந்து இறங்கிவந்து மேன்மைபெறச் செய்யுமையா


சிந்துபுரக் கவிராயர்

நல்லையில் வீற்றிருந்து நல்லருள் புரிவாயே!
PC SOLUTIONS
305, Kasthuriyar Road,
Jaffna
T.P- 021 222 1101



# காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு

## ப.சிதம்பரம் உறுதி



(டெல்லி)

காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட்டு அங்கு அமைதி நிலவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் உறுதியளித்துள்ளார்.

அனைத்த மாநில பொலிஸ் தலைவர்களின் மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது. மாநாட்டில் உரையாற்றிய ப.சிதம்பரம் காஷ்மீர் மாநிலத்தில் தொடர்ந்து வன்முறை கலவரம் நிகழ்ந்து வருவது தொடர்பாக கவலை தெரிவித்தார். இதனைத் தடுத்து நிறுத்தி அங்கு அமைதி ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ள அவர் அம்மாநிலத்தில் நிரந்தர அரசியல் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ள இருப்பதாகவும் கூறினார்.

மாவோயிஸ்டுகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்தபோதிலும் அவர்களிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்று சிதம்பரம் தெரிவித்தார். மேலும் கடந்த 21 மாத காலமாக நாட்டில் தீவிரவாத தாக்குதல்கள் பெருமளவில் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார். (6-2)


# நடன இயக்குநர் போனி வர்மாவை கரம் பிடித்தார் நடிகர் பிரகாஷ்ராஜ்



பிரபல வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். பிரகாஷ்ராஜும் அவரது மனைவி லலிதாகுமாரியும் விவாகரத்து பெற்று சமீபத்தில் பிரிந்தனர். பின்னர் இந்திப்பட நடன இயக்குனர் போனிவர்மாவுக்கும் பிரகாஷ் ராஜுக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் பொது நிகழ்ச்சிகளில் சேர்ந்து பங்கேற்றனர்.

இந்தநிலையில் பிரகாஷ் ராஜுக்கும் போனி வர்மாவுக்கும் மும்பையில் நேற்று காலை 10.30 மணிக்கு திடீர் திருமணம் நடந்தது. அங்குள்ள மலாடு விளையாட்டுமைய அரங்கில் திருமண நிகழ்ச்சிகள் நடந்தன. வேத மந் திரங்கள் ஓத இந்து முறைப்படி போனிவர் மாவுக்கு பிரகாஷ் ராஜ் தாலி கட்டினார் நெருங்கிய நண்பர்கள் உறவினர்கள் மட்டுமே திருமணத்தில் பங்கேற்றனர்.

தமிழ் நாட்டில் இயக்குனர்கள் ராதாமோகன், குகன்,விஜி,குமரவேலு மற்றும் கப்பார் வெங்கட் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள். (6-2)



டில்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில் நடந்த ரக்ஷா பந்தன் கொண்டாட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு ராக்கி கட்டும் சிறுமி




# காவிரி நீரை திறந்து விட முடியாது; தமிழக அரசுக்கு கர்நாடகம் கைவிரிப்பு

காவிரியில் உடனடியாக 26 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடுமாறு தமிழக அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்க முடியாது என கர்நாடக அரசு நிராகரித்து விட்டது.

இருப்பினும் எதிர்வரும் நாட்களில் பெய்யும் மழை அளவை பொறுத்து, தமிழகத்துக்கு தண்ணீர் தருவது குறித்து பரிசீலனை செய்வதாக கூறிவிட்டது. இதையடுத்து , பிரதமர் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையத்தை கூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை தமிழகம் எழுப்பியுள்ளது.

தமிழகத்துக்குத் தேவையான தண்ணீரை திறந்துவிடுவதில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் இழுபறி இந்த ஆண்டும் ஏற்பட ஆரம்பமாகியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ஆம் திகதி மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுவது வழக்கம். இந்தத் தண்ணீரை நம்பி தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.


ஆனால், இம்முறை குறுவை சாகுபடிக்கு தேவையான முழுமையான தண்ணீர் கிடைக்க வேண்டுமெனில் கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு உண்டான தண்ணீர் திறந்து விடப்பட்டாக வேண்டும்.

ஆனால், தங்களது அணைகள் நிரம்பவில்லை என்று கர்நாடகம் தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

(6-2)

# உளுத்துப்போன குற்றச்சாட்டை முன்வைக்கிறார் கருணாநிதி

## விஜயகாந் அறிக்கை



வேறு எந்தக் குறையும் காண முடியாததால் கறுப்புப் பணம் இருப்பதாக உளுத்துப் போன குற்றச்சாட்டை முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் தெரிவித்துள்ளார்.

சினிமாவில் நடிப்பதற்காக வாங்கும் சம்பளத்தில் பெரும்பகுதியை வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்குவதாக விஜயகாந் மீது முதல்வர் கருணாநிதி குற்றம் சாட்டியிருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் நேற்று முன்தினம் விஜயகாந் வெளியிட்ட அறிக்கையில்,

கதாநாயகனாக நடித்து எனக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தில் பெரும்பகுதியை வருமான வரி கட்டாமல் கறுப்புப் பணமாக வாங்குவதாக முதல்வர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் முதல்வர், நேரடியாக கூறாமல் கூறப்படுகிறது என்று சொல்லி தப்பித்துக்கொள்வது ஏன்?

இவர் இப்படி கூறுவது முதல் முறையல்ல எம்.ஜி.ஆர்.மீதும் இதே குற்றச்சாட்டைத்தான் கூறினார். வேறு எந்தக் குற்றம் குறையும் காண முடியாததால் உளுத்துப்போன குற்றச் சாட்டை கூறி வருகிறார். முதல்வர் கருணாநிதியின் குடும்பவாரிசுகள் வாரத்துக்கு ஒரு திரைப்படம் எடுக்கின்றனரே அது என்ன வெள்ளைப்பணமா? இரவு, பகல் பாராமல் உழைப்பதில் வரிகட்டியதுபோக மீதிப் பணத்தை ஏழை எளிய மக்களுக்கு வழங்கி வரும் என்னைக் குறை கூறும் முதல்வர் அவரது குடும்பத்தினர் உலக பணக்காரர்கள் வரிசையில் போட்டியிடும் அளவுக்கு செல்வம் வந்தது. எப்படி என்பதை விளக்குவாரா? கதை வசனம் எழுதுபவர்கள் எல்லாம் கோடீஸ்வரர்கள் ஆவதில்லை. 60 ஆண்டுகள் பொது வாழ்வில் 55 ஆண்டுகளுக்குப் பின் தான் திடீரென தர்மம் செய்ய வேண்டும் என்கிற ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

சொந்தப் பணத்தில் ஏழைகளுக்கு உதவி செய்துள்ளாரா? என்று நான் கேட்ட பின் தான் நன்கொடை பட்டியலை அவர் வெளியிட்டார். எத்தனையோ பட்டங்களை வாரி வழங்கும் தி.மு.கவினர் கூட கருணாநிதியை வள்ளல் என்று அழைப்பதில்லை. அப்படி அழைப்பதற்கு அவர்களின் மனசாட்சி இடம் தரவில்லை.

ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணம் இயல்பாகவே ஏற்பட வேண்டும். வருமானத்தை ஈட்டுவது முக்கியமல்ல அதனை எவ்வாறு செலவு செய்கிறோம் என்பதே முக்கியம் என்னைப் பொறுத்தவரை சம்பாதிப்பதில் பெரும் பகுதியை ஏழைகளின் வயிற்றில் தான் வைக்கிறேனே தவிர இரும்புப் பெட்டியில் அல்ல ஆனால் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்து ஊழல் செய்தவர்கள் ஏழைகளுக்கு என்ன செய்துள்ளனர்? தனக்கு பிறகும் தனது மனைவிக்கு பிறகும் வீட்டை தானமாக வழங்குவதாக முதல்வர் அறிவித்துள்ளார் இன்று பசிக்கிறதே என்பவனுக்கு 8 நாள்கள் கழித்தா சோறு போடுவது உச்ச நீதிமன்ற நீதிபதி சர்க்காரியாவே கருணாநிதியை விஞ்ஞான ரீதியான ஊழல்வாதி என்று கூறியுள்ளார். கருணாநிதி ஆட்சியில் தமிழகம் ஊழல் மயமாகி இருக்கிறது. அரசுத் துறையில் எங்கும் இலஞ்சம் தாண்டவமாடுகிறது. தேர்தல் என்றாலே இலஞ்சம் கொடுத்து வாக்கு கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது

என் முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுமாறு முதல்வர் கூறியுள்ளார். என் முகத்தை நான் பார்ப்பது முக்கியமல்ல நாட்டு மக்கள் பார்க்கிறார்களா என்பதே முக்கியம் உயர் பதவிகளில் இருப்பவர்கள் ஆணவமும் ஆத்திரமும் கொண்டு பேசுகிறார்கள் என்றால் அது தே.மு.தி.கவின் வளர்ச்சியைக் காட்டுகிறது என்று விஜயகாந் கூறியுள்ளார். (6-2)

# காஷ்மீரில் மீண்டும் கலவரம்; இளைஞர் பலியானதால் பதற்றம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் மீண்டும் அங்கு போராட்டம் வெடித்துள்ளது.

ஸ்ரீநகரில் பிரிவினைவாதிகள் நடத்திய போராட்டத்தின் போது பாதுகாப்புப் படையினர் மீது அவர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணி செல்ல முயன்றதால் பாதுகாப்புப் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனை கண்டித்து தலைநகர் ஸ்ரீநகரில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது.மாநிலம் முழுவதும் ஆங்காங்கே நிகழ்ந்து வரும் கலவரத்தை தடுக்க பாதுகாப்புப் படையினர் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(6-2)



வடக்கின் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் மதிப்பீட்டு கலந்துரையாடல் அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் ரிசாட் பதியுதீன், கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன, மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பொருளாதார அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:- என்.குமார்)

## கணித, விஞ்ஞான பாடங்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டம்

(அல்வாய்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்குரிய துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டம் அடங்கிய இறுவெட்டுக்கள் அண்மையில் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் சகல கல்வி வலய பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனை அமுல்படுத்துவது தொடர்பாக சகல அதிபர்களுக்கும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும் இதுதொடர்பாக எடுக்கப்பட்ட பாடசாலைகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என சகல கோட்டக்கல்வி அதிகாரிகளும் மீளாய்வுக் கூட்டத்தின் போது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆகவே, பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட இறுவெட்டுக்களில் உள்ள விபரங்களை மாணவர்களுக்கு அதனை பிரதி செய்து வழங்கி மாணவர்கள் பெறும் புள்ளிகளை கணிதம் மற்றும் விஞ்ஞானப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், தத்தம் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கவேண்டுமென வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (2-19)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மாலை யாகபூசை, தீபாராதனை என்பன இடம்பெறவுள்ளன. (6-4)

## இணையம் மூலமாக ஒருவரின் முகத்தினை அடையாளம் காணும் புதிய சொப்ட்வெயார்

(பெங்களூர்)

இணையத்தளம் வாயிலாக ஒருவரின் உருவத்தினை அடையாளம் காணும் புதிய சொப்ட்வெயார் விரைவில் அறிமுகமாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப புரட்சியின் ஒரு பகுதியான பேஸ்காம் என்ற இணையத்தளம் புதிய சொப்ட்வெயார் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

இதில் முகம் தெரியாத எந்த ஒரு நபரையும் எளிதில் அடையாளம் காணலாம்.

இதுகுறித்து பேஸ் காம் தலைமை நிர்வாகி கில்ஹிர்ஸ்கி கூறுகையில் ,

இத்தகைய புதிய சொப்ட்வெயர் தொழில்நுட்பத்தினை எந்த ஒரு சமூக வலைதளங்களிலும் பயன்படுத்தலாம். பூகம்பம், நிலச்சரிவு போன்ற பேரிடர் காலங்களில் மனிதர்கள் முகம் தெரியாமல் இறந்து போனால் அவர்களை இத்தகைய நவீன தொழில்நுட்பத்தின் மூலம் அடையாளம் காணலாம். இதனை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்புகள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன என்று தெரிவித்தார். (6-2)

## முல்லைத்தீவில் 800 பேர் நேற்று மீள்குடியேற்றம்

வவுனியா மெனிக் பாமில் தங்கவைக்கப்பட்டிருந்த இடம்பெயர்ந்தவர்களில் மேலும் 800 பேர் நேற்று முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இன்னும் 33 ஆயிரம் பேர் மட்டுமே சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிளிநொச்சியில் மீள்குடியேறுவோருக்காக 18 ஆயிரம் புதிய வீடுகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் 4 ஆயிரத்து 780 வீடுகளைக்கட்ட உலக வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது. (6-2)




யாழ்ப்பாணம், சுண்டுக்குளி கொய்யாத்தோட்டம், புதுவீதி

திருவருள் ஸ்ரீ ஞானசெல்வ விநாயகராலய

புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ்ச

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயகப் பெருமான் அடியார்களே!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கள விகிர்தி வருடம் ஆவணி மாதம் 13ஆம் திகதி (29.08.2010) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 6மணி 20 நிமிடம் முதல் 7மணி 20 நிமிடம் வரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீஞான செல்வ விநாயகரிற்கும் பரிவார மூர்த்திகளிற்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அன்றும், அதற்கு முதல் மூன்று நாட்கள் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து விநாயகரருளினால் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

*மஹா கும்பாபிஷேக கிரியைகள் யாவும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்*
பிரம்மஸ்ரீ. தா.மகாதேவக் குருக்களார் *தலைமையில் நடைபெறும்.*

கிரியாகால நிகழ்வுகள்

ஆவணி மாதம் 11 ஆம்திகதி வெள்ளிக்கிழமை (27.08.2010)
காலை 6 மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பம்: விநாயகர் வழிபாடு அனுச்ஞை முதல் வாஸ்துசாந்தி வரை மாலை 3 மணிக்கு இரட்சாபந்தனம் கட ஸ்தாபனம் கலாகஷணம் யாகாரம்பம் நவாக்னிபூஜை, தீபாராதனை 7 மணி 27 நிமிடம் முதல் 8 மணி 27 நிமிடத்திற்குள் தூபிதீப யந்திர பிம்பஸ் தாபனங்கள் , அஷ்டபந்தனம், தைலாப்யங்கள்.

ஆவணி மாதம் 12 ஆம்திகதி சனிக்கிழமை (28.08.2010)
காலை 6மணிக்கு பக்தர்கள் *எண்ணெய்க் காப்பு* ஆரம்பம். காலை 7 மணிக்கு யாகபூஜை விசேஷ திரவிய ஹோமம், யாக தீபாராதனை. மாலை 3 மணிக்கு பக்தர்கள் எண்ணெய்க்காப்பு பூர்த்தி ஆலய சுத்தி, பிம்ப சுத்தி ரட்சாபந்தனம், பூர்வ சந்தானம், பச்சிம சந்தானம், யாகதீபாராதனை குருமார்களுக்கு வஸ்த்ர, உத்தரீய உஷ்ணீச விபூதிப் பைகள் வழங்கிக் கௌரவித்தல்.

ஆவணி மாதம் 13 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை (29.08.2010)
அதிகாலை 5.30மணிக்கு மஹா பூர்ணாகுதி தீபாராதனை பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் , 6மணி 20 நிமிடம் அளவில் தூபிகள் கும்பாபிஷேகம், 7 மணி 20 நிமிடத்திற்குள் நடைபெறும்.

கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற ஆசி வழங்குபவர்கள்
சிவஸ்ரீ. பா.சர்வேஸ்வரக்குருக்கள்
(வசந்தன் ஐயா) லண்டன்
பிரம்மஸ்ரீ. க.கேசவசர்மா
(ஆலய நித்திய அர்ச்சகர்)

கும்பாபிஷேகத்தை பிரதமகுருவாக இருந்து நடாத்தி வைப்பவர்
சிவஸ்ரீ.ம.சோமசுந்தரக்குருக்கள்
காயத்திரி பீடம், இணுவில்

புதுவீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

விநாயகர் தொண்டில் நிற்கும்
ஆலய பரிபாலனசபையும், இந்து இளைஞர் மன்றமும்,
அடியார்களும்

(C-937)

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்


## யாழ் - ஆரியகுளம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

தற்போது மிகுந்த அசுத்தமடைந்த நிலையில் காணப்படும் யாழ்.ஆரிய குளத்தைச் சுத்தம் செய்து அதனையும் அதனை அண்டிய பகுதியையும் செப்பனிட்டு இப்பகுதியை நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் கடந்த 17 ஆம்திகதி அப்பகுதியைச் சென்று சுற்றிலும் ஆராய்ந் துள்ள அமைச்சர் வெகுவிரைவில் இதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (6)

## ஒட்சிசனின்றி 553 நாட்கள் உயிர்வாழும் பக்டீரியாக்கள்


### விஞ்ஞானிகள் தகவல்

(லண்டன்)

ஒட்சிசன் இல்லாத இடத்தில் பக்டீரியாக்கள் எத்தனை நாட்கள் உயிர்வாழும் என விண்வெளி விஞ்ஞானிகள் ஆய்வு மேற் கொண்டனர். அதற்காக இங்கிலாந்தில் தெற்கு கடற்கரையில் உள்ள ஒரு மலையின் செங்குத்தான பாறையில் இருந்து சில பக்டீரியாக்களை சேகரித்தனர்.

அவற்றை ஒட்சிசன் இல்லாத விண்வெளிக்கு எடுத்து சென்றனர்.

அங்கு வைத்து சோதனை செய்தனர். அப்போது பக்டீரியாக்கள் 553 நாட்கள் உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவை அல்ட்ரா லைட்கள்த காஸ்



மிக் கதிர்கள், ஒளிவீச்சில் விண்வெளியில் உள்ள தட்ப வெப்பநிலையில் உயிர் வாழும் தன்மை உடையது என்றும் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வு கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் மூலம் பக்டீரியாக்கள் விண்வெளி வீரர்களின் உபயோகத்துக்கு பயன்படும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-2)

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.

~ நாலெனாபஸ்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் துரதிர்ஷ்டம் நீக்குவார் உளரோ?

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மகுடம்.

மருத்துவர்களை உருவாக்கும் அரும்பணியை அந்தப்பீடம் செய்வதனால் அதற்கு அத்துணை மதிப்பு.

ஆனால், தற்போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் என்றாலே பயமும் ஏக்கமும் வரும் அளவிற்கு அங்கு ஏதோவொரு வகையிலான அழுக்கம் - அழுத்தம் - மனவெறுப்பு - அன்னியோன்னியமற்ற உறவுநிலை இருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவர்களின் தற்கொலைச் சம்பவங்களே இத்தகையதொரு மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மருத்துவபீட மாணவர்கள் நால்வர் தற்கொலை செய்து கொண்டமை மிகப்பெரும் வேதனையையும் தாங்கமுடியாத அதிர்ச்சியையும் தருவதாகும்.

உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் சிறப்பாகச் சித்தியடைந்து, இந்த நாட்டில் இருக்கக்கூடிய தரப்படுத்தல் - மட்டுப்படுத்தல் என்ற வரையறைகளைக் கடந்து மருத்துவக் கற்கைநெறிக்கு தெரிவாகிய பின்னர், யாழ்ப்பாண மருத்துவபீடத்தில் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில், பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியாக அமையவில்லை என்ற காரணத்துக்காக மருத்துவத்துறை மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வதென்பது எந்தளவிற்கு ஏற்புடையது - நியாயமானது என்பதை பொறுப்பானவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதற்காகக் தற்கொலை செய்வதென்ற முடிபை 'இனிமேல் முடியாது' என்ற மனநிலையில் மட்டும் நின்று எடுப்பது அல்ல.

மாறாக தனது சித்தியின்மை பற்றி தனது விரிவுரையாளர்களுடனோ அன்றி தனது சக மாணவர்களுடனோ கதைத்து சீர்மியப்பட முடியாதென்ற துணையற்ற - வெறுமைநிலை ஏற்படுகின்றபோது எடுக்கப்படுவதாக இருக்கும்.

இவற்றைப் பார்க்கும்போது யாழ்ப்பாண மருத்துவபீடத்தில் சுமுகமான உறவுநிலைக்கு - ஆற்றுப்படுத்தலுக்கு - ஆறுதல் வார்த்தை கூறுவதற்கு - இடர்படும் இடத்தில் தூக்கி விடுவதற்கு பெரும் பஞ்சம் உண்டு என்பதை உணர முடிகின்றது.

ஆக, தற்கொலை செய்துகொண்ட மாணவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி, கறுப்புக்கொடி, அஞ்சலியுரை, அனுதாபம் என்ற பட்டோலையை வாசிப்பதுடன் கடமை முடிந்ததாக நினைக்காமல்,

உள்ளிருக்கும் புரியாப் பொருளை புரிந்து கொண்டு - தெளிந்துகொண்டு செயற்படுவதே வேதனை தரும் துர்மரணங்களை தடுக்கும் வழியாகும்.

நடக்குமா? நடந்தால் மாற்றம் தெரியும்.

# கல்வி மட்டத்தில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக ஆளுநர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் முன் னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் அண்மையில் வவுனியா கல்வித் திணைக் கள கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலை மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்தா லோசிக்கப்பட்டது.

இதில் மன்னார் கல்வி வலயத்தில் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களிற்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை குறித்தும் அத்துடன் பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறை சம்பந்தமாகவும் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆளுநரிடம் எடுத்துக் கூறினார்.

இதைக் கேட்டறிந்த ஆளுநர் 23 ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நிய மனம் வழங்குவதற்காக நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கினார்.

அத்துடன் மாணவர்களுக்கான சீருடை இலவசப்பாட புத்தகங்கள் யாவும் மாணவர்க ளுக்கு கிடைக்கப்பெற்றதா எனவும் இம்முறை ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றி யமை குறித்தும் சகல வலயக்கல்விப்பணிப் பாளர்களிடமும் கேட்டறிந்தார்.

மேலும் தளபாடப் பற்றாக்குறை குறித்து உடனடியாக மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருடன் உடனடியாக தொடர்பு கொண்டு கேட்டபோது அதற்கு செயலாளர் எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் தள பாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வ தாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி துணுக்காய் பிரதேசங்களில் யுனிசெவ் நிறுவனத்தால் தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின் றமை குறித்து யுனிசெப் பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த காலங்களில் ஆசிரியர் ஆலோசகருக்காக வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புத் தொகையானது ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 3 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கு அனுமதி வழங்கியுள்ள தாகவும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்மாவட்டத்தின் 2009 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறு பேற்றில் அகில இலங்கை ரீதியில் யாழ் மாவட்டம் 16 இடத்திற்கு பின்தள்ளப்பட்டமை சகல வசதிகளிலிருந்தும் இந்தப் பின்ன டைவுக்கான காரணத்தை மதிப்பீடு செய்து அதற்குரிய நிவர்த்தியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் ஆகிய மாவட்டங்களில் மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டு மென்றால் பாடசாலைகளுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற் கொள்ளப்பட்ட பின்னரே திறக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி யமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் , ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா, பிரதிப்பிரதம செயலாளர் இ.மனோரஞ்சிதன், திட்டமிடல்செயலாளர் எல்.உமாகாந்தன் மற்றும் சகல வலயக்கல்விப்பணிப்பாளர்கள், மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (4)

# தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக எப்போதும் செயற்பட்டதில்லை

## ஜே.வி.பி.யின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக எப்போதும் செயற்பட்டதில்லை என ஜே.வி.பி.கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். சகல இன சமூகங்களுக்கும் சம உரிமையும் சம சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டுமென தமது கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளுமே இலங்கையின் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அதனை துரிதகதியில் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் தமது கட்சிக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுவதாகவும் இதனை தமிழ் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென முதலில் தமது கட்சியே வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை காணப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலையான கொள்கை என அவர் தெரிவித்துள்ளார்.

சில தமிழ் அரசியல் வாதிகளும் தமிழ் ஆதரவாளர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சிலரும் ஜே.வி.பி கட்சி தொடர்பான பிழையான எண்ணக்கருக்களை தமிழ் மக்கள் மனதில் விதைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# அன்பே உனது மூலதனம்-பாபா

நித்தமும் இறை சிந்தனை நித்தமும் இது நீதி ,இது அநீதி என பிரித்தறியும் சிந்தனை, நித்தமும் இது தர்மம். இது அதர்மம் என உய்த்துணரும் சிந்தனை. இம் மூன்றும் ஒரு மனிதனிடம் உதயம் பெறுமானால் அவன் இறைவனை நேரிற்கு நேர் காண்பது மட்டுமல்ல அவனே இறைவன் ஆகுகின்றான்.

எல்லாம் வல்ல பரந்த தெய்வம், சத்ய சாயியின் அருள் மொழி நீயும் தெய்வம் நானும் தெய்வம். ஒரு வித்தியாசம் என்ன வெனில் உன்னை நீ யார் என்று உணரவில்லை உலக இச்சைகளே போதுமென்றான மனமும், உடலும் உள்ள மனிதனாகவே வாழ்கின்றோம். உடலிற்கு மெருகூட்டுகின்றோம். உள்ளத்திற்கு வலுவூட்டுகின்றோம் பணம், பொருள் தேடலை பெறுவதிற்கு மூளைக்கு வேலை கொடுக்கின்றோம். உலக பந்தங்களே ஆணவம், கன்மம், மாயை என்பவற்றிக்கு காலாகின்றது என்பதை அறியாமல் எம்முள்ளம் குப்பை கொட்டும் பெருங்குழியாக தோற்றம் பெறுகிறது. இதனால் மனித உள்ளம் அநாகரிகமான, காட்டுமிராண்டித்தனமான, ஈனச் செயல்களை வெளிக்காட்டுகின்றது.

மனிதனின் தோற்றம் மட்டுமல்ல சகல ஜீவராசிகளின் தோற்றங்களும் உலக பந்தத்தினால் தான் ஏற்படுகின்றது. ஆனால் இறைகூற்றென இயற்றிய தத்துவார்த்தங்களை முற்றும் முழுதுமாக பயன்படுத்துவது மனிதன் என்பவர் யாராக இருந்தாலும் அது மிக மிக கஷ்டம். அத்துடன் இம் மனித உலகமே அழிந்தொழிந்தாகிவிடும். அவ்வாறான மனிதனை படைத்து இழிசெயலை காட்டியதும் இறைவன் குற்றமாகி விடும்.

சொர்க்கம், நரகம் இரண்டு உலகங்களும் இங்குதான் சுழன்று வரும் உலகில் பரமாத்மா மேலே, ஜீவாத்மா கீழே என்ற வேறுபாட்டுடன் சுகபோகத்திற்காக மேலே உள்ள பரமாத்மாவை வேண்டி வணங்குவோம் என்பது எல்லையற்ற மடமைத்தனமாகும்.



இதனாலே எல்லாம் வல்ல சத்ய சாயிநாதன் அருளுகின்றார், அன்புதான் உன்னுடைய ஊதியம், மூலதனம். இதனை வைத்து அடுத்தவரிற்கு சேவையாற்று. சூது, பொறாமை, களவு வக்கிரத்தால் உன் உள்ளத்தை நீயே கெடுக்காதே. உன் இதயம் நான் வாழும் பெருங்கோயில். நித்தமும் என்னுடைய நினைப்பு உன் உள்ளத்தை மட்டுமல்ல உன் சந்ததியினரையும் சேர்த்து துப்புரவு செய்யும் அமிலம் என நினை. நீ எந்த தெய்வத்தை வழிபட்டாலும் அந்தத் தெய்வத்தின் முன்னாலோ, பின்னாலோ என்னையும் சேர்த்து நித்தமும் வணங்கிக்கொள். உன் வாழ்வில் நிச்சயம் காண்பாய் பெருந்தவப்பேறு.

ஜெய் சாய்ராம் யாகவன்

# ஐந்து ஆண்டுகள் தலையில் குண்டுடன் வாழ்ந்த நபர்

போலந்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தலையில் குண்டுடன் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின் தலையில் குண்டு பாய்ந்துள்ள நிலையில் குறித்த நபர் தனது வாழ்நாளில் ஐந்து ஆண்டுகளை கடந்துள்ளார்.

குடி போதையில் இருந்த நேரத்தில் ஏற்பட்ட சம்பவமொன்றின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனால் அந்தச் சம்பவத்தை மறந்து விட்டதாகவும் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

போலந்து நாட்டைச் சேர்ந்த குறித்த நபர் தற்போது ஜெர்மனியில் வாழ்ந்து வருகின்றார்.

பின் தலையில் காணப்படும் குண்டை தாம் ஓர் கொப்புளம் என எண்ணியதாக அவர் தெரிவித்துள்ளதுடன் 2004 ஆம் ஆண்டு அல்லது 2005 ஆம் ஆண்டு புது வருடக் கொண்டாட்டங்களின் போது இந்தத் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் இடம்பெற்ற தாகக் குறிப்பிட்டுள்ளார். குறித்த குண்டு மண்டை ஓட்டைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்லாத காரணத்தினால் அவ ருக்கு எவ்வித உயிர் ஆபத்துக்களும் ஏற்படவில்லை.

சில வேளைகளில் தலையில் வலி ஏற்பட்ட போதிலும் மருத்துவரை நாடி பரிசோதனை செய்ய வேண்டும் என தமக்கு தோன்றவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலையில் காணப்பட்ட குண்டை மருத்துவர்கள் நீக்கியுள்ளதாகவும் நாளை வெள்ளிக்கிழமை அளவில் குறித்த நபர் வைத்திய சாலையிலிருந்து வெளியேற முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# சீன விமானம் தீப்பிடித்து எரிந்து 43 பேர் பலி; 53 பேர் படுகாயம்

(பீஜிங்)



சீன பயணிகள் விமானம் தரையிறங்கும் சமயத்தில் பனிமூட்டம் காரணமாக ஓடுபாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது. விமானம் தீப்பிடித்து எரிந்ததில் 43 பயணிகள் உடல் கருகி பலியானார்கள்.

காயங்களுடன் 53 பேர் உயிர் தப்பினர். சீனாவின் ஹெலாங்ஜியாங் மாகாணத்தில் உள்ள லிண்டு விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 96 பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த விமானம் தரையிறங்கியது. அப்போது விமான நிலையம் கடும் பனி மூட்டத்தால் சூழப்பட்டிருந்தது.

இதனால் ஓடுபாதையில் சரியான இடத்தில் இறங்காமல் விமானம் விலகிச் சென்றது. தடுப்புச் சுவர்களை இடித்துக் கொண்டு வயல் வெளியில் பாய்ந்தது. இதில் விமானம் தீப்பிடித்தது. விமானத்தின் அவசரக் கதவுகள் உட்பட அனைத்து கதவுகளும் திறக்கப்பட்டன. இருப்பினும் மளமளவென பரவிய தீயில் சிக்கி 43 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 53 பயணிகள் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர். (6-2)

# சர்வாதிகாரி ஹிட்லர் யூத மதத்தவர்

## மரபணு சோதனையில் தகவல்

ஜெர்மனியின் சர்வதிகாரியாக திகழ்ந்தவர் அடோல்ப் ஹிட்லர். கத்தோலிக்க கிறிஸ்தவரான இவர் அதில் பற்று இல்லாமல் இருந்தார். இந்த நிலையில் அவர் யூத மதத்தை சேர்ந்தவர் அவரது முன்னோர்கள் ஆபிரிக்காவை சேர்ந்தவர்கள் என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவரது உடன் பிறந்தவரின் மகன் அலெக்சாண்டர் ஸ்டூவர்ட் ஹன்டன் வயது (61) நியூயோர்க்கின் லாஸ் ஐஸ்லாந்தில் உள்ளார். அவரது எச்சிலை எடுத்து டி.என்.ஏ. பரிசோதனை செய்யப்பட்டது.

இவர் தவிர அவரது நெருங்கிய உறவினர்கள் 39 பேரிடம் இருந்து எச்சில் எடுக்கப்பட்டு இதேபோன்று பரிசோதிக்கப்பட்டது.

அதில் அவர் யூத மதத்தை சேர்ந்தவர் என்றும் அவ்ரது முன்னோர் வடக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது. இந்தத் தகவலை புலனாய்வு பத்திரிகையாளர் ஜூன்பால் முல்டர்ஸ் தெரிவித்துள்ளார். (6)

# தலிபான்களுக்கு பாகிஸ்தான் உளவு அமைப்பு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

எமது அனுமதியின்றி ஹமீட் கர்சாய் தலைமையிலான ஆப்கானிஸ்தான் அரசுடனோ அல்லது அமெரிக்காவுடனோ பேச்சுவார்த்தையை தொடங்கக் கூடாது என தலிபான்களுக்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ எச்சரித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ. அமைப்பின் உயர் தலைவர்கள் இதைத் தெரிவித்ததாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.


பாகிஸ்தானை சேர்த்துக் கொள்ளாமல் இந்த பேச்சுவார்த்தையை நடத்த ஆப்கானிஸ்தான் முயற்சிப்பதாகவும் அதை ஈடேற விடுவதில்லை என்ற முடிவுடனும் ஐ.எஸ்.ஐ இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் அரசுடன் தலிபான் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி மேற்கொள்வதை தெரிந்து கொண்ட ஐ.எஸ்.ஐ அமைப்பினர் அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்கிற உள்நோக்கத்துடன் அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ யை பயன்படுத்தியே தலிபான் அமைப்பின் இரண்டாம் நிலை தலைவர் என கருதப்படும் முல்லா அப்துல் கனி பராதரை கைது செய்தனர்.

கராச்சியில் கடந்த ஜனவரியில் இவர் பிடிபட்டார். அடுத்த சில நாள்களில் மேலும் 23 தலிபான் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பாகிஸ்தானே பல காலமாக பாதுகாப்பும் வசதியும் கொடுத்து வந்துள்ளது என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கைது செய்து வைத்திருந்த இந்தத் தலைவர்களை இப்போது பாகிஸ்தான் அரசு விடுதலை செய்துள்ளது. ஆப்கானிஸ்தான் சென்று அங்கு போரில் ஈடுபட்டு வரும் அமெரிக்க படைகளுக்கு எதிராக சண்டையிடுங்கள் எனவும் விடுதலை செய்யப்பட்டுள்ள தலிபான்களை ஐ.எஸ்.ஐ பணித்துள்ளதாக அந்த பத்திரிகை மேலும் கூறுகிறது. (6)



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அந்நாட்டு பிரதமர் யூசப் ரசா கிலானியை (வலது) அமெரிக்க மத்திய தலைமை கட்டளை அதிகாரி ஜென்ரல் ஜேம்ஸ் மாடிஸ், பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள வெள்ளத்திற்கு, தங்கள் நாட்டு நிவாரண உதவி குறித்து கலந்துரையாடினார்.




# பணம் உணவை தொட்டதும் அலர்ஜியால் தவிக்கும் பெண்

(லண்டன்)

இங்கிலாந்தைச் சேர்ந்த யுவோன் சைமன் என்ற பெண் ஒருபுதுவிதமான நோயினால் அவதிப்பட்டு வருகிறார். மனித உயிர்கள் உணவின்றி வாழ முடியாது.

ஆனால் அவருக்கோ உணவை தொட்டாலே அலர்ஜி நோய் ஏற்பட்டு விடுகிறது. அது போன்று பணத்தை அதாவது ரூபாய் நோட்டுகளை தொட்டாலும் அலர்ஜி உண்டாகிறது.

இவை மட்டுமின்றி மழையில் நனைந்தால் சொல்லவே வேண்டாம். மிகக் கடுமையான அலர்ஜியால் இவர் அவதிப்படுகிறார். எனவே அவர் தான் போகும் இடத்துக்கு கையில் குடையுடன் செல்கிறார்.

எனவே அவர் வைத்தியரிடம் சென்று இந்த நோய்க்குப் பரிசோதனை செய்து கொண்டார். அப்போது இவற்றை தொட்டால் சுரப்பிகள் அதிகம் சுரந்து அலர்ஜி ஏற்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். அவற்றில் உள்ள சில தாதுக்கள் அவருக்கு இதை உண்டாக்குவதாகவும் கூறினர்.

எனவே அவர் அலர்ஜியை ஏற்படுத்தும் தாதுக்கள் நீக்கப்பட்ட தண்ணீர் , பருப்பு வகைகள் , கரட் ,ஆப்பிள் மற்றும் குறிப்பிட்ட அரிசி வகை உணவுகளை சாப்பிடுகிறார். இது போன்று அலர்ஜி நோய் உள்ள நபரை பார்த்ததில்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (6-2)

# பாகிஸ்தானில் இராணுவப்புரட்சி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை

## அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு




பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட வாய்ப்பில்லை என்று அந்நாட்டு ஜனாதிபதி சர்தாரி கூறியுள்ளார். பாகிஸ்தானில் பெய்த மழையின் காரணமாக அங்கு பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டுள்ளது. மழை வெள்ள பாதிப்பில் சிக்கி இரண்டு கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புகளை சரி செய்ய குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் தேவைப்படும் என்று கூறப்படுகிறது.

மேலும் வெள்ளப்பாதிப்புகளை பயன்படுத்தி பயங்கரவாதிகள் மக்களிடையே ஊடுருவலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. வெள்ள பாதிப்புகள் கடுமையாக இருந்த போது அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர் தாரி வெளிநாட்டு சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்தார்.

இது பல்வேறு தரப்பினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்நிலையில் பாகிஸ் தான் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள முட்டாஹிதா குவாமி இயக்க (எம்.க்யூ.எம்) தலைவர் அல்டாப் உசேன் பாகிஸ்தானில் உள்ள ஊழல் அரசியல்வாதிகளை ஒடுக்க சர்வாதிகார நடவடிக்கைகளை மேற்கொள் ளும் ஜனநாயக தலைவரை தாங்கள் ஆதரிக்கப் போவதாக தெரிவித்திருந்தார்.


இது அந்நாட்டு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் வெளிநாட்டு செய்தியாளர்களிடம் ஜனாதிபதி சர்தாரி பேசினார். அப்போது அவர் கூறுகையில் ,

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட வாய்ப்பு இல்லை. அதற்கான சூழ்நிலையும் இங்கு நிலவவில்லை என்றார். (6-2)



பாகிஸ்தானில் பெய்த பலத்த மழையால் தேராகாஸிகான் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 17 பேருடன் சென்ற பேருந்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தன்னார்வத் தொண்டர்கள் ஆற்றுக்குள் கவிழ்ந்து கிடந்த பேருந்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

# சேவாக் சதம்; சாதித்தது இந்தியா விடைபெற்றது நியூசிலாந்து அணி



(தம்புள்ள)

சேவாக்கின் அதிரடிச் சதத்துடனும் வேகப் பந்து வீச்சாளர்களின் ஒத்துழைப்புடனும் இந்திய அணி 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இலங்கை, இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் தம்புள்ளவில் நடைபெற்று வருகின்றது.

இதில் 6-வதும் இறுதியுமான லீக் போட்டியில் நேற்று இந்திய-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நிலையில் இரு அணிகளும் களமிறங்கின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது பந்திலேயே முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் பூச்சியத்துடன் மில்ஸின் பந்து வீச்சில் ஹோப்சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஹோலி 8, யுவராஜ் சிங் 6 ஓட்டங்களுடனும் சுரேஸ் ரெய்னா ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்ற இந்திய அணி 13 ஓவர்களில் 66 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

இந்திய அணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்துச் சரிந்தபோதும் ஒருமுனையில் வீரேந்திர சேவாக் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 41 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் தோனி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி சேவாக்கிற்கு இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் அதிரடியைத் தொடர்ந்த வீரேந்திர சேவாக் 87 பந்துகளில் தனது 13-வது சர்வதேச ஒருநாள் போட்டிச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடி 5-வது விக்கெட்டுக்காக 116 பந்துகளில் 107 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது வீரேந்திர சேவாக் 93 பந்துகளில் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 110 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ரவீந்திர ஜடேஜா பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். எனினும் இந்திய அணி 38.3 ஓவர்களில் 199 ஓட்டங்களை எடுத்தபோது அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி 75 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களையும் ரவீந்திர ஜடேஜா 26 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 17 ஓட்டங்களையும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய நெகரா பூச்சியத்துடனும் பிரவீன்குமார் 6, முனாப் பட்டேல் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

எனினும் இறுதியில் மில்ஸ் அதிரடி அரைச் சதம் பெற நியூசிலாந்து அணி கௌரவமான இலக்கை அடைந்தது.

இந் நிலையில் நியூசிலாந்து அணி 30.1 ஓவர்களில் 118 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மில்ஸ் 35 பந்துகளில் (7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 52 ஓட்டங்களையும் மைக்கே ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரவீன்குமார் 8 ஓவர்கள்



பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர் உட்பட 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல் 7 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நெகரா 2 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்குச் சதம் அடித்து அடித்தளம் அமைத்த சேவாக் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி ஒரு மேலதிக புள்ளி உட்பட 5 புள்ளிகளைப் பெற்றுத் தொடரில் 10 புள்ளிகளைப் பதிவு செய்து இரண்டாவது அணியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதன் மூலம் நாளை மறுதினம் நடைபெறும் இறுதிப் போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் மோதுகின்றன.

இதேவேளை இப் போட்டியில் தோல்வியடைந்த நியூசிலாந்து அணி தொடரிலிருந்து விடைபெற்றது.

## யாழ்.பல்கலைக்கழக அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஜனார்த்தனன், கிரிசாந்தின் பந்துவீச்சும், ஜெயரூபனின் துடுப்பாட்டமும் கைகொடுக்க சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினை 4 விக்கெட்டுக்களால் வென்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அணி, பற்றீசியன் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியினை வருடாவருடம் நடத்துகிறது.

ஒன்பதாவது தடவையாக இவ்வாண்டு மேற்படி போட்டிகளை தற்போது நடத்திவருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை ஜனார்த்தனன் தனது பந்துவீச்சு மூலம் அடுத்தடுத்து வெளியேற்றினார். ஓட்டங்கள் எடுக்க சிரமப்பட்ட சென்றலைட்ஸ் அணியினை இறுதியாக வந்த வீரர்கள் 100 ஓட்டங்களைக்கடக்க வைத்தனர்.

தொடர்ந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட 32.3 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது சென்றலைட்ஸ் அணி. துடுப்பாட்டத்தில் நிசாந்தன், திவாகர் முறையே 21,14 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பல்கலை அணி சார்பாக ஜனார்த்தனன் 4 விக்கெட்டுக்களையும், கிரிசாந்தன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 103 என்ற இலகுவான வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கு ஆரம்ப விக்கெட் பலமான அடித்தளத்தை இட்டது. முதலாவது விக்கெட் 58 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்ட போதும் தொடர்ந்து வந்த வீரர்கள் ஆட்டமிழந்து தடுமாறியது.

எனினும் தொடக்க அடித்தளத்தின் உதவியுடன் 6 விக்கெட்டுக்களை இழந்து 18.2 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது யாழ். பல்கலைக்கழக அணி.

துடுப்பாட்டத்தில் ஜெயரூபன் 41 ஓட்டங்களையும், திவாகரன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக மதுசன் 3 விக்கெட்டுக்களையும், ரேகன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதில் இஷாந்த் சர்மா ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் சௌத்தி 4 விக்கெட்டுக்களையும் நாதன் மக்குலம் 3 விக்கெட்டுக்களையும் மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும் மைக்கே ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 224 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்டவீரர் குப்தில் பூச்சியத்துடனும் வாற்லிங் 2 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் 8 ஓட்டங்களுடனும் ஸ்கொட் ஸ்ரைரிஸ் ஒரு ஓட்டத்துடனம் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற நியூசிலாந்து அணி 8.5 ஓவர்களில் 22 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

அடுத்து வந்த வில்லியம்ஸ் 13 ஓட்டங்களுடனும் ஹோப்கிங்ஸ் பூச்சியத்துடனும் நாதன் மைக்குலம் 5 ஓட்டங்களுடனும் சௌத்தி 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.



ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் தொடர் கனடாவின் மான்ட்ரியலில் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ரஷ்யாவின் வேராஜுவானேராவை வீழ்த்தி கோப்பை வென்றார். வெற்றிக் கோப்பையுடன் வோஸ்னியாக்கி.

## மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டப் போட்டி முடிபுகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற போட்டியில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து விளையாடிய வதிரி டைமன்ஸ் அணி 1:4 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியான பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்சேவியர் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் 1:1 என்ற கோல்கணக்கில் போட்டியை சமன் செய்தனர்.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் மனோகரா அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதியது. இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இறுதிவரை இடம்பெற்றும் இறுதியில் இரு அணிகளும் 2:2 என்ற கோல் கணக்கில் போட்டியை நிறைவுசெய்தன.

மற்றுமொரு போட்டியான பிற்பகல்4.30 மணிக்கு இடம்பெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து உரும்பிராய் சென் மைக்கல் அணி மோதியது. போட்டி இறுதி வரை இரசிகர்களை உற்சாகப்படுத்தும் வகை யில் கோல்கம்பங்களை நோக்கி பந்துகளை அனுப்பிய வண்ணம் இருந்தன.

இரு அணிகளின் கோல்காப்பாளர்கள் மிகவும் சிறப்பாக தடுக்கப்பட்டதால் இறுதியில் பாடுமீன் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுக்கொண்டது. (ச-4,24)

கடத்தப்பட்ட உறுப்பினர் விடுவிக்கப்படாவிட்டால்

# வெகுஜன போராட்டம் நடத்தப்படும் த.ம.வி. புலிகள் கட்சி எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மர்மமான முறையில் காணாமல் போயுள்ள தமது கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் பிரகாசம் சகாயமணி கடத்தப்பட்டிருக்கலாம் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவர் மூன்று தினங்களுக்குள் விடுதலை செய்யப்படாத பட்சத்தில் அவரை விடுதலை செய்யக் கோரி மட்டக்களப்பு மாவட்டம் எங்கும் வெகுஜன போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மத்திய செயற்குழு சார்பாக அக்கட்சியின் செயலாளர் எட்வின் சில்வா கைலேஸ்வரராஜாவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது'

கடந்த சனிக்கிழமை இரவு முதல் குறித்த உறுப்பினர் காணாமல் போன சம்பவமானது சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள தமிழ் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதுடன் மனிதாபிமானமற்ற ஜனநாயக விரோத செயலாகவும் இது அமைகிறது.

அத்துடன் மக்கள் மத்தியில் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் காணாமல் போயுள்ள மாநகர சபை உறுப்பினரை கடத்தியவர்கள் உடனடியாக விடுதலை செய்து மட்டக்களப்பு மாநகரின் சுமுகமான சூழ்நிலையை பாதுகாக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவருக்கு விளக்கமறியல்!

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள, மலேசியாவிலிருந்து செயற்பட்ட தமிழீழ விடுதலைப்புலி இயக்க அங்கத்தவர் இருவரையும் பாதாளஉலகக் குழு உறுப்பினர் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

ஜயந்த வீரக்கோன் அல்லது ரட்ணவீர வீரகெட்டிய என்பவரை புலிகளுடன் தொடர்புடைய குற்றத்துக்காக கைது செய்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்தனர்.

அவரை கைது செய்த பின் அவர் மலேசியாவிலிருந்து செயற்படும் புலிகள் இயக்க அங்கத்தவர்களான செல்வமோகன் மற்றும் பிரபாகரனுடன் இணைந்து பாதுகாப்புச் செயலாளரையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் கொலை செய்ய சதி செய்தமை தெரியவந்ததாகவும்,

தெற்கில் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தென்னிலங்கை சிங்கள பாதாளஉலகக் குழு அங்கத்தவரை நியமித்திருந்ததாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

இவ் வழக்கு விசாரணையை செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி வரை நீதிவான் ஒத்தி வைத்தார். (ச-5)

## பிக்குகளின் எதிர்ப்புக்கு மத்தியில் மிருக பலிச் சடங்கு நடந்தது

இலங்கையில் சிலாபத்தில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் பிக்குமாரின் எதிர்ப்புக்கு மத்தியில் மிருக பலிச் சடங்கு நடந்து முடிந்துள்ளது. இந்த சடங்கை நடத்தக் கூடாது என்று அகில இலங்கை பிக்குமார் சம்மேளனம் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சிலாபம்பகுதியில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தது.

ஆனாலும் அந்த ஆர்ப்பாட்டம் பொலிஸாரால் தடுக்கப்பட்டது. இந்த மிருக பலிச் சடங்கு பலகாலமாக நடந்து வருவதாக கூறிய ஒரு ஆலய நிர்வாகி உள்ளூர் மக்கள் இந்தச் சடங்குக்கு மிகுந்த ஆதரவைத் தந்ததாகவும் தெரிவித்தார். அது மாத்திரமின்றி அனைத்து மதமக்களும் இந்த வைபவத்தில் கலந்துகொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மிருக பலிச் சடங்கை அகில இலங்கை இந்துமாமன்றம் எனும் அமைப்பு கண்டித்திருந்தது. ஆனால் நேற்று ஆலயத்தின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் பேச்சியம்மன் சிலைக்கு முன்பாக பக்தர்களால் மூன்று ஆடுகளும் சுமார் 7 கோழிகளும் பலியிடப்பட்டு அவை அங்கேயே சமைக்கப்பட்டு வந்திருந்த அனைத்து இனமக் களுக்கும் பகிரப்பட்டதாக ஆலய நிர்வாகி தெரிவித்தார். (ச-5)

## மீள்குடியமர்த்தப்படாதோரின்...

அப்போது அதற்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, இலங்கையில் தமிழ் மக்களை மீள்குடியமர்த்தும் செய்ய இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று உறுதியளித்தார்.

அப்போது குறுக்கிட்டு பேசிய டி.ஆர்.பாலு, இலங்கை அரசின் மீது பல்வேறு கு ற்றச்சாட்டுக்களை அடுக்கினார். இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்படுகின்றனர் என்றும் இன்னும் 52 ஆயிரம் பேர் முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய-இலங்கை உடன்பாட்டின் படி 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை செயல்படுத்த இலங்கை முன்வரவில்லை என்று குற்றம் சாட்டிய பாலு, சமீபத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த ஒரு பேட்டியில், அரசியல் தீர்வுகாண்பதற்கு அவசரம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அரசியல் தீர்வுகாணும் எண்ணம் அவருக்கு இல்லை என்பதை அது குறிப்புணர்த்தியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு சென்றிருந்த போது 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த 14 முகாம்களுக்கு மட்டும் தாங்கள் அழைத்துச் செல்லப்படவில்லை என்று குற்றச்சாட்டினார்.

அந்த சிறுவர்கள் விடுதலைப்புலிகளால் பயிற்சி யளிக்கப்பட்டவர்கள் என்று தங்களிடம் அப் போது தெரிவிக்கப்பட்டதாகவும் அவ்வாறு இருந்தாலும் கூட மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இந்தியா அது பற்றி கவனிக்க வேண்டும். இந்தியா அளிக்கும் உதவிகள் இலங்கை தமிழ் மக்களுக்கு முறையாக சென்றடையவில்லை என்றார் பாலு.

இந்தப்பிரச்சினை குறித்து அ.தி.மு.க. உறுப்பினர் தம்பித்துரை, ம.தி.மு.க. உறுப்பினர் கணேசமூர்த்தி ஆகியோரும் கவலைகளை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் அமைச்சர் கிருஷ்ணா பேசும் போது தங்களுக்குக் கிடைத்த தகவலின்படி இடைத்தங்கல் முகாம்களில் இன்னும் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் பேர் வரையுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியா வழங்கும் உதவிகள் தமிழ் மக்களை சென்றடைகிறதா என்பது குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையர் மூலம் கண்காணிக்கப்படுவதாக தெரிவித்தார். (ச-5)

## எரிபொருள் நிலையத்தில் நேற்று தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் தனியாருக்கு சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக எரிபொருள் நிரப்பு இயந்திரம் ஒன்று தீப்பற்றிக்கொண்டது.

இதனையடுத்து ஊழியர்கள் உடனடியாக எடுத்த தீயணைப்பு நடவடிக்கையினால் பாரியளவு பாதிப்புக்கள் எவையும் இடம்பெறாது தவிர்க்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எரிபொருள் நிரப்பும் பணிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது. (ச-5)

## இலங்கை...

விடயங்கள் விவாதிக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மீனவர் பிரச்சினை குறித்தும் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவிடம் விவாதித்ததாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மாலை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு செயலர் சிவ்சங்கர் மேனனையும் பசில் ராஜபக்ஷ சந்தித்துப் பேசினார்.

இதனிடையே ;பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் நேற்றிரவு புதுடில்லிக்குச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## டிசம்பருக்குள் மீள்குடி...

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இலங்கை வடக்கு மாகாணங்களில் முற்றிலும் மீள்குடியமர்த்தும் பணிகள் நிறைவடைந்து விட்டது. தற்போது முகாம்களில் 10 ஆயிரம் தமிழர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களும் டிசம்பர் மாதத்திற்குள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழர்களுக்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழர்களின் மீள்குடியேற்றம் செய்த இடங்களில் இந்திய அரசு 500 கோடி ரூபாய் செலவில் 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர உள்ளது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இந்தியா-இலங்கை இடையேயான சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கவே டில்லி வந்துள்ளேன் என்றார்.

மத்தியநிதியமைச்சர்பிரணாப்முகர்ஜி, வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோரையும் சந்திக்க இருப்பதாகவும் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.. (ச-5)

## ஐ.நாவின் நிரந்தர பிர...

அரசாங்கம் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

தற்போது வடமாகாண ஆளுனராக உள்ள மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியை அப்பதவியில் அமர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

தற்போதைய வதிவிடப் பிரதிநிதியின் சேவையால் ஜனாதிபதிக்கு திருப்தி ஏற்பட வில்லை என்பதால் அடுத்த மாதம் முதல் சந்திரசிறியை அப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முன்மொழிந்துள்ளார் என்றும் அத்தகவல் கூறுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கான கட்டளைத் தளபதியாக இருதடவைகள் பதவிவகித்தவர் சந்திரசிறி. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற இவரை அரசு வடமாகாண ஆளுனராக நியமித்திருந்தது.

போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தில் சேவையாற்றிய அதிகாரிகளுக்கு ராஜதந்திரிப் பதவிகளை வழங்குவதாக கோத்தபாய முன்னரே வாக்குக் கொடுத்திருந்தார். இதையடுத்தே சந்திரசிறி இப்பதவிக்குத் தேர்வாகியுள்ளதாக நம்பப்படுகிறது. (ச-5)

## கொலைக்...

பட்டிருந்தார்.

அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந் நிலையில் இவ் வழக்கு கடந்த 19 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது நீதவான் க.பரமராஜா இத்தீர்ப்பினை வழங்கினார்.

கடத்தி உடைமைகளை கொள்ளையடித்தமைக்காக பத்துவருட சிறைத்தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் பிணைப்பணமும் வழங்க வேண்டும் எனவும் தவறினால் மேலும் இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் கொலைக்குற்றத்துக்காக மரணதண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (எ)

## பாதிக்கப்பட்ட தமிழ்...

தீர்மானத்தின் மீது பேசியபோது அவர் இதனைக் கூறினார்.

உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்திய அரசு தொடர்ச்சியாக உதவி செய்து வருகிறது. மறு குடியமர்த்தப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு இலங்கை அரசைஇந்தியாதொடர்ந்தும்வலியுறுத்திவருகிறது.

போர் நடைபெற்றபகுதியில் இந்திய அரசு சிறப்புவாய்ந்த மருத்துவமனையை அமைத்துள்ளது. இதுவரை 50 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். பலருக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை உலகதரத்தில் அமைந்துள்ளது. சூழ்நிலைக்கு ஏற்ப வரும் நோய்களை கட்டுப்படுத்தும் நிபுணர்களும் அங்குள்ளனர். இது தவிர ஏராளமான மருத்துவ உபகரணங்களும் தமிழர் பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழர்களால் விவசாயம் உள்ளிட்ட தொழில்களில் மீண்டும் ஈடுபட்டு சுயகௌரவத்தோடு வாழவேண்டும் என்பதற்காக இந்திய அரசு பல்வேறு வகைகளில் உதவி செய்து வருகிறது. விவசாய தொழில்களை எளிதாக மேற்கொள்ள அதி நவீன மேலாண்மை கருவிகள் இலங்கை தமிழர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வேளாண்மைத்துறை நிபுணர் குழு தமிழர் பகுதிகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டது. விவசாயம் தொடங்குவதற்கு தேவையான ஆரம்பக்கட்ட உதவிகள் செய்யப்பட்டன. மேலும் விதைகள், டிராக்டர்கள் போன்றவைகளும் தமிழர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்குப்பகுதியில் குடியேறியுள்ள தமிழர்களுக்கு இந்தியா சார்பில் 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படவுள்ளது. முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்றார். (ச-5)

## அரசியலமை...

முதலில் தேர்தல் முறை சீர்திருத்தம் பற்றி பேசியது. பின்னர் நிர்வாக அதிகாரம் கொண்ட பிரதமர் என்ற விடயத்துக்கு தாவியது.

இறுதியாக நடத்த கூட்டத்தில் ஜனாதிபதி பதவிக்காலம் மீதுள்ள கட்டுப்பாட்டை அகற்றுதல் என்ற விடயத்தை முன்வைத்தது.

இதனால் அரசியலமைப்புத் தொடர்பான நகலை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என கோருகின்றோம். அதன்மீது விவாதம் செய்வதுதான் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார். (ச-5)

## 70 புள்ளிக்கு...

பிள்ளை பரீட்சையில் வீழ்ந்து விட்டதாக கருதுகிறார்கள் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வெட்டுப்புள்ளி நேரடியாக பாடசாலைகளுக்கே அனுப்பப்படும். பிரபல பாடசாலைகளுக்கான மாணவர்கள் தேர்வு நாடளாவிய ரீதியிலே தெரிவு செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தரம் 5 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டும் என கல்வியாளர்களும் பல்கலைக்கழக பேராசிரியர்களும் கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களே பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (முந்திக் கிடைத்த தகவல் உள்ளே) (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.